உ

# இந்து சாதனம்

சிவமயம்

(HINDU ORGAN)

புத்தகம்: 110 இதழ்: 01 - 12 பிரமாதி வருடம்

1999 — 2000

சைவ பரிபாலன சபை
450, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
2000-04-13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
SRI LANKA

UNIVERSITY OF JAFFNA
LIBRARY
14 JUL 2000
PERIODICALS DIVISION

ARCHIVES

University of Jaffna
183319
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA * LIBRARY *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ஸூ ஆவணி மீ 26 ஆம் உ
( 1889 )

பிரதி விலை: 10 ரூபா
செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

230.5 HIN AR.
UNIVERSITY OF JAFFNA LIBRARY 14 JUL 2000 2007 DIVISION

# இந்து சாதனம்
## (HINDU ORGAN)

புத்தகம்: 110

பிரமாதி வருடம் சித்திரைத் திங்கள் 17 ஆம் நாள்
( 30-04-1999 ) சித்திரைப் பூரணை

இதழ்: 1

ARCHIVE

# சைவமகாநாடு

**யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை வருடா வருடம் எடுத்துவந்த அகில இலங்கைச் சைவமகாநாடு ஐந்து வருடகால இடைவெளிக்குப்பின் இவ்வாண்டு மீண்டும் நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளது. மகாநாடு மே 7, 8, 9 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் நீராவியடி கல்லூரி வீதியில் அமைந்துள்ள சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சிறப்பாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் சைவபரிபாலன சபையின் உபதலைவரும் சைவ மகாநாட்டு உபகுழுவின் தலைவரும் பரீட்சைச் செயலாளருமான சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள் மேற்கொண்டுள்ளார்.**

மே மாதம் ஏழாம் திகதி வெள்ளிக்கிழமை காலை வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் நடைபெறும் வழிபாட்டைத் தொடர்ந்து மகாநாடு காலை ஒன்பது மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஆரம்பமாகி மூன்று நாட்கள் தினமும் முற்பகலிலும் பிற்பகலிலும் இரு அமர்வுகளாக நடைபெறும்.

அகில இலங்கை ரீதியில் சைவ மகாநாடுகளை நடத்தி வருவது சைவபரிபாலன சபையின் நீண்டகாலப் பணிகளுள் ஒன்று. வருடா வருடம் தமிழ் நாட்டிலிருந்து சைவப் பெரியார்களை அழைத்துவந்து எமது நாட்டு அறிஞர்களுடன் சைவ மகாநாடுகளைச் சபை நடத்தி வந்துள்ளது. மகாநாடு நடைபெறும் காலங்களில் வண்ணார்பண்ணை விழாக்கோலம் பூண்டிருக்கும். சைவமணம் கமழும். தொடக்க நாளன்று வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் வழிபாடு முடிந்தவுடன் நாவலர் ஆச்சிரம மண்டபத்திற்கு மகாநாட்டுப் பேராளர்கள் மங்கள வாத்திய சகிதம் காங்கேயன்துறை வீதி, கல்லூரி வீதி வழியாக அழைத்து வரப்படும் காட்சி பெரிய புராணத்தில் கூறப்பட்டுள்ள சில சந்தர்ப்பங்களை நினைவுபடுத்தும். மகாநாட்டிற்காகத் தமிழ் நாட்டிலிருந்து வருகை தரும் சைவப்பெரியார்கள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் அழைத்துச் செல்லப்பட்டு அவர்களது பேச்சைக் கேட்கும் வாய்ப்புப் பெருந்தொகையான மக்களுக்கு வழங்கப்பட்டது. இவ்வாறு வருகை தந்தவர்களுள் மதுரை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர், திருவெண்காடு சிவராஜயோகமடம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்க வாசக ஞான தேசிக சுவாமிகள், திரு. கி. வா. ஜகன்நாதன், காஞ்சிபுரம் திரு. க. வச்சிரவேலு முதலியார், புலவர் திருமதி சி. குழந்தையம்மாள், வயிரநாகரம் ஸ்ரீமத் தத்புருஷ தேசிகர், கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார், தருமபுரம் திரு. சி. அருணைவடிவேல் முதலியார், மாயூரம் செஞ்சொற் கொண்டல் சிங்காரவேலன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

(02ம் பக்கம் பார்க்க)

### பூரணை தோறும் வெளிவரும்

உங்கள் அபிமான "இந்துசாதனம் Hindu Organ" 1889 ஆம் ஆண்டு முதல் இரு கிழமைக்கு (பட்சத்திற்கு) ஒன்றாக வெளிவந்தது. 1913 ஆடி முதல் இந்து சாதனம் வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் வெளிவந்தது. Hindu Organ வாரமிருமுறை வெளிவந்தது. 1923 ஆடி முதல் இந்து சாதனமும் வாரமிருமுறை திங்கள் வியாழன் தோறும் வெளியிடப்பட்டது. பின்னர் வெள்ளி தோறும் வெளிவந்த இந்துசாதனம் **Hindu Organ** பிரமாதி வருடச் சித்திரை மாதம் முதல் பூரணை தோறும் வெளிவரும்.

### திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

பிரமாதி வருடம் சித்திரைத் திங்கள் 27 உ

(10-05-99) திங்கட்கிழமை

சைவபரிபாலன சபை

நாவலர் ஆச்சிரம மண்டபத்தில்

காலை 9 மணி முதல் 12 மணி வரை நடைபெறும்.

புராணபடனம், பண்ணிசை, சொற்பொழிவுகள்

இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
183319

சைவ மகாநாடு
(01 ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுநிலை காரணமாக முன்னர் நடந்த மகாநாடுகளைப் போன்ற மகாநாடுகளை இப்போ நடத்த முடியாதிருக்கின்ற போதிலும் இம்மாதம் நடைபெறும் சைவ மக்களிடையே ஒரு எழுச்சியை உண்டுபண்ணும் என்பது திண்ணம்.

# சைவ மகாநாட்டு முக்கிய நிகழ்வுகள்

## முதலாம் நாள் (07-05-99) முற்பகல் அமர்வு:

தலைவர்: பேராசிரியர் ரி. கோபாலகிருஷ்ண ஐயர், தலைவர், இந்து நாகரிகத்துறை யாழ் பல்கலைக்கழகம்.

மு. ப. 8.30 திருமுறைப்பூசை, திருமுறையோதல், வேதபாராயணம்

மு. ப. 8.45 மங்கள விளக்கேற்றல் — திரு. வே. பொ. பாலசிங்கம், யாழ் மாநகரசபை ஆணையாளர்.

மு. ப. 9.15 அருளுரை: நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்
ஆசியுரை: தர்மாஸ்தா குரு குல முதல்வர் சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்
வரவேற்புரை: ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம், சமயப் பிரசார அமைச்சர், சைவபரிபாலன சபை.
தலைமையுரை:

மு. ப. 10.15 விரிவுரை: ''அன்றாட வாழ்க்கையில் சைவ சித்தாந்தம்'' திருமதி கலைவாணி இராமநாதன் (இந்து நாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

மு. ப. 10.45 விரிவுரை: ''நானோ இதற்கு நாயகமே'' சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவ. மகாலிங்கம் (பலாலி ஆசிரியர் கலாசாலை)

மு. ப. 11.15 திருமுறை ஓதல்

மு. ப. 11.30 விரிவுரை: ''ஆலயக் கிரியைகள் சமகால நோக்கு'' சிவஸ்ரீ பாலசர்வேஸ்வரக் குருக்கள்

மத். 12.00 சைவபரிபாலன சபை 1998 ஆம் ஆண்டு நடாத்திய சைவசித்தாந்த பிரவேச பண்டிதர் தேர்வில் சித்தி பெற்றோருக்குப் பட்டமளித்துச் சான்றிதழ் வழங்கல்

## முதலாம் நாள் (07-05-99) பிற்பகல் அமர்வு:

தலைவர்: திரு. சோ. பத்மநாதன், அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை

பி. ப. 2.30 திருப்புகழ் பண்ணிசை: பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்

பி. ப. 3.00 தலைமையுரை:

பி. ப. 3.15 ''பெரிய புராணம் — பன்முகப்பார்வை'' பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்

பி. ப. 4.30 விரிவுரை: ''கலைவளர்க்கும் சிவாலயங்கள்''
திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன் (இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

பி. ப. 5.00 நாடகம்: ''பக்தநந்தனார்'' மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

பி. ப. 6.00 பண்ணிசை: தேவார இசைமணி திரு. S. R. திருஞானசம்பந்தன்

## இரண்டாம் நாள் (08-05-99) முற்பகல் அமர்வு:

தலைவர்: திரு. அ. சிறிக்குமாரன், அதிபர், யாழ். இந்துக் கல்லூரி

மு. ப. 8.30 ''திருமுறை ஓதுதல்'' யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவர்

மு. ப. 9.00 தலைமையுரை

மு. ப. 9.15 விரிவுரை: 'திருமுறைகளில் மனித மேம்பாடு''
திருமதி நாச்சியார் செல்வநாயகம் தலைவர், நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்

மு. ப. 9.45 விரிவுரை; ''திருமந்திரம் காட்டும் வாழ்வு''
சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை

(03 ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(02 ம் பக்கத் தொடர்ச்சி)

மு. ப. 10.15 திருமுறை ஓதல்

மு. ப. 10.30 மாணவர் கருத்தரங்கு: நெறிப்படுத்துபவர்: திரு. க. சிவராமலிங்கம் அவர்கள்
பொருள் ''வாழ்க்கையில் சைவம்''

## இரண்டாம் நாள் (08-05-99) பிற்பகல் அமர்வு:

தலைவர்: செல்வி இருபாதேவி வீரசிங்கம் (அதிபர், சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

பி. ப. 2.30 ''திருமுறை ஓதல்''

3.00 தலைமையுரை

3.15 விரிவுரை ''தருமம் என்றொரு பொருள் உளது''
செல்வி விக்கினேஸ்வரி சிவசம்பு (இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

3.45 ''விரிவுரை: ''சமயமும் சமுதாயமும்''
பண்டிதர் ம. ந. கடம்பேஸ்வரன் (புனித பத்திரிசியார் கல்லூரி)

4.30 வில்லுப்பாட்டு: ''அரும்பும் சருகும்'' (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி)

5.30 பண்ணிசை: செல்வி பரமேஸ்வரி கணேசன் (இசையாசிரியர், யாழ். இந்துக் கல்லூரி)

## மூன்றாம் நாள் (09-05-99) முற்பகல் அமர்வு:

தலைவர்: பேராசிரியர் அ. சண்முகதாஸ் கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்
பிரதம விருந்தினர்: கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்

மு. ப. 8.30 திருமுறை ஓதல்

9.00 தலைமையுரை

9.15 விரிவுரை: ''வினையும் விடுதலையும்''
பேராசிரியர் நா. ஞானகுமாரன் (தலைவர், மெய்யியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்)

9.45 விரிவுரை: ''சைவமும் எதிர்காலமும்''
திரு ஆறு. திருமுருகன் (ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

10.15 திருமுறை ஓதல்

10.45 விரிவுரை: ''திருமுறைகளில் பக்தி இலக்கியப்பாங்கு''
பண்டிதை திருமதி பொன். பாக்கியம்

11.15 பிரதம விருந்தினர் உரை

11.30 சைவநெறித் தேர்வு — 1998 இல் அகில இலங்கைப் பரிசு பெறுபவர்களுக்கு பரிசளிப்பு.

## மூன்றாம் நாள் (09-05-99) பிற்பகல் அமர்வு:

தலைவர்: சைவப்புலவர் வ. கந்தசாமி (உபதலைவர், சைவபரிபாலனசபை)

பி. ப. 2.30 புராணபடனம்

3.00 பண்ணிசை: கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மாணவர்

3.40 விரிவுரை: ''திருநின்ற செம்மை''
பண்டிதர் வ. பேரின்பநாயகம்

4.10 விரிவுரை: ''மண்ணிற் பிறந்தார் பெறும் பயன்''
செல்வி புஷ்பா செல்வநாயகம்

4.40 நாடகம்: ''அப்பூதியடிகள்'' (பெரியபுலம் ம. வி. மாணவர்)

6.00 பண்ணிசை: சங்கீதபூஷணம் இ. நடராசா

UNIVERSITY OF JAFFNA LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத்தின் மகிமை

—சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம், B. A. அவர்கள்

*முதலாம் அத்தியாயம்*

## சைவ சித்தாந்தம்

வேத சிவாகமங்கள் இறைவனால் அருளிச்செய்யப் பட்டவை எனக் கொண்டு அவற்றின் அதிகாரத்தை ஏற்றுக் கொள்பவர்களது சமயமே சைவசமயம்.

வேதங்கள் எல்லாவகை மக்களுக்குமானது. ஆனால் சைவாகமங்களோ ஆத்மீக எண்ணம் கொண்டவர்களுக்காக மட்டும் அருளிச்செய்யப்பட்டது. நான்கு வேதங்களும் இப்போதும் நிலைத்திருக்கின்றன. ஆனால் அநேகமான ஆகமங்கள் மறைந்து விட்டன. அருள்நந்தி சிவம் என்பவரது காலத்தில் இருபத்தெட்டு ஆகமங்களும் நிலைத்திருந்தன. அவர் சகல ஆகமங்களையும் கற்றிருந்தமையால் **சகலாகமபண்டிதர்** என அழைக்கப்பட்டார். நாம் செய்த தவத்தின் பயனாக, அருள் நந்தி சிவம் என்பார் தமது பெரும் இலக்கியப் படைப்பான **சிவஞானசித்தியார்** என்னும் நூலில் அநேகமான ஆகமங்களின் சாரத்தை உள்ளடக்கியுள்ளார். சிவஞானசித்தியாருக்கு **விளக்கவுரை** எழுதியவர்கள் பதினேழு சிவாகமங்களைக் குறிப்பிட்டு அவற்றில் கூறப்பட்டனவும் சிவஞான சித்தியாரில் கூறப் பட்டுள்ள மிக முக்கிய உபதேசங்களும் ஒரே மாதிரியானவை எனக் குறிப்பிட்டுள்ளனர். ஆகவே இவ்விளக்கவுரைகளை எழுதியவர்கள் காலத்தில் பதினேழு ஆகமங்களாவது மறையாதிருந்தன என்பது பெறப்படும்.

சித்தியாரைத் தவிர **சிவஞானபோதம்** என்ற நூலும் எமக்குக்கிடைத்துள்ளது. இது ரௌரவ சிவாகமத்தின் ஒரு பகுதி எனவும் அவ்வாகமத்தின் சாரமெனவும் நம்பப்படுகிறது. இது தமிழில் மெய்கண்டார் என்பவரால் ஒரு சிறுவிளக்கவுரையுடன் ஆக்கப்பட்டது. இவ்விரு தமிழ் நூல்களும் எமக்கு ஆகமங்களின் தத்துவப் பகுதியை (ஞான பகுதியை)த் தருகின்றன. இவ்விரு நூல்களுக்கும் அனுபந்தம் போல அல்லது குறைநிரப்பாக வேறு பன்னிரண்டு தமிழ் ஆக்கங்கள் இருக்கின்றன. இவ்வாறமைந்த பதினான்கு நூல்களும் **சாஸ்திரங்கள்** என அழைக்கப்படுகிறது. இவற்றுள் இருபா இருபஃது என்பது அருள்நந்தி

(05 ம் பக்கம் பார்க்கவும்)

## ஆசிரியர் குறிப்பு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானிற்குப் பின்னர் சைவசமய வளர்ச்சிக்காகத் தம்மை முற்றாக அர்ப்பணித்துக் கொண்டவர்கள் வரிசையில் புலோலியூர் தந்த சைவப் பெருந்தகை சு. சிவபாதசுந்தரனாரின் பெயர் முன்னிற்கின்றது. அவர் ஒரு விடயத்தை இரண்டு விதமாகக் கூறியதில்லை. பிறர் தம்மை மெச்சவேண்டுமென்பதற்காகவோ, புகழுக்காகவோ அவர் பேசியதில்லை. எழுதியதில்லை. தனக்குச் சரியெனப்பட்டதைக் கூறத் தயங்கியதுமில்லை.

அவர் சைவசமயம் பற்றிப் பன்னிரண்டு புத்தகங்களை எமக்கு ஆக்கித் தந்தார். இவற்றுள் இலகுவான தமிழ் வசன நடையில் சிறுவர்களும் ஓரளவு படிப்புடையவர்களும் படித்து உணரக்கூடிய வகையில் எழுதப்பட்டது ''சைவசமயசாரம்'' என்னும் சிறிய நூல். (இது யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் மீண்டும் அச்சிட்டு வெளியிடப்படவுள்ளது) 'Saiva School of Hinduism'' என்னும் ஆங்கில நூல் சைவசித்தாந்த உண்மைகளை ஆங்கிலத்தில் விளக்குவது. இது ஒரு முதற்தரமான நூலெனப் பெரும் பாராட்டைப் பெற்றது. மிகவும் கருத்தாளமுள்ளது. ஆனால் சைவசித்தாந்தம் பற்றியும் சைவ வாழ்க்கை முறை பற்றியும் அறிந்து கொள்ள விருப்பமுள்ள, ஆனால் ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு இலகுவில் கிரகிக்க முடியாதளவிற்கு இந்நூல் தரத்திற்கூடியது.

'Glories of Saivaism'' என்ற நூல் எட்டு சிறு அத்தியாயங்களை உடையது. முதலாவது அத்தியாயம் சைவசித்தாந்தத்தை வடித்துத் தருகின்றது. அதனால் அது வாசிப்பதற்கு சிறிது கடினமாய் இருக்கக்கூடும். ஆனால் ஏனைய ஏழு அத்தியாயங்களும் வாசிக்க இலகுவானவை. இந்த அத்தியாயங்கள் எல்லோரையும் எவ்வித விதி விலக்குமின்றி (இழிந்த, நெறியிழந்த, ஒழுக்கம் கெட்டவர்களைக் கூட - இங்குதான் சைவசமயத்தின் அழகு பொதிந்துள்ளது.) முத்தி நெறிக்கு இட்டுச்செல்லும் பாதையில் முன்னேறிச் செல்ல உதவும் வாழ்க்கை நெறியைத் தெளிவாகக் காட்டுகின்றன. இந்த வாழ்க்கைமுறை இந்நூலில் விளக்கப்பட்டு, நியாயப்படுத்தப்பட்டு, பிரமாணநூல்களின் உதவியுடன் பலப்படுத்தப்படுகின்றது.

சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் எழுதிய கடைசி நூல் இது. நோயுற்றுத் தளர்ந்த நிலையில் எழுதித் தனது சமய சகாக்களுடன் அலசி ஆராய்ந்து, தர்க்கம் செய்து, பல தடவை திருத்தங்கள் செய்யப் பெற்றது இந்நூல். யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரின் சைவப்பிரகாச அச்சு இயந்திர சாலையில் இந்நூல் 1953 ஆம் ஆண்டு அச்சு வாகனம் ஏறிக்கொண்டிருந்த சமயம் - நூற்பிரதியின் முதலாவது ஒப்பு நோக்கல் முடிவுற்ற வேளையில் - சைவப்பெரியார் மரணமிலாப் பெருவாழ்வு பெற்றார். ஆகவே இந்நூலை அப்பெரியார் சைவ உலகுக்கு விட்டுச்சென்ற மரணசாசனமாகவும் உயிலாகவும் கொள்ளலாம்.

இந்தப் புத்தகம் இளம் மாணவர்கள் வாசித்துப் பயன் பெறக்கூடியது. தமிழில் உள்ள கடினமான நூல்களை வாசித்துக் கிரகிக்கப் பொறுமையும் பயிற்சியும் பலருக்கு இல்லாமையால் - ஆங்கிலம் போதனா மொழியாயிருந்த காலகட்டத்தில் - தமிழில் உள்ள கடினமான நூல்களை வாசிக்கும் அவசியத்தை இல்லாமற் செய்யும் வகையில் எழுதப்பட்ட நூல் இது. ஒவ்வொரு சைவசமயியும் தனது சமயத்தை அறிந்து கொள்ள வேண்டும். அதற்கு முதற்படி இந்நூலை வாசிப்பதுதான்.

தமிழ் போதனா மொழியாக உள்ள இக் காலகட்டத்தில், இந்த நூல் தமிழாக்கப்படின் பலரும் பயனடைவர் என்பது உணரப்பட்டது. இந்நூலின் நீண்ட அத்தியாயமான முதலாம் அத்தியாயம் இருபகுதிகளாக்கப்பட்டு இவ்விதழிலும், அடுத்த இதழிலும் வெளிவருகிறது- அடுத்த ஏழு அத்தியாயங்களும் அடுத்து வரும் ஏழு இதழ்களிலும் வெளிவரும்.

சைவசித்தாந்தம், சைவப் புனித நூல்கள், புனிதமிக்க சாம்பல், வழிபாடு, வழிபாட்டுத் தலங்கள் பஞ்சாட்சரம், சைவ வாழ்வு, ஜனரஞ்சக சைவம் ஆகிய எட்டுத் தலைப்புகளில் இம்மொழிபெயர்ப்பு வெளிவரவிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத்தின் மகிமை

(04 ம் பக்கத் தொடர்ச்சி)

சிவம் என்பவராலேயே எழுதப்பட்டது. ஏழு அல்லது எட்டு நூல்கள் அருள்நந்தி, சிவத்தின் சீடரின் சீடரான உமாபதி சிவம் என்பவரால் எழுதப்பட்டது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டதாக நம்பப்படும் திருமூலர் அருளிய திருமந்திரம் என்ற நூலும் சைவ சித்தாந்தக் கருத்துக்களைக் கொண்டுள்ளது. இப்பதினைந்து நூல்களும் சிவாகமங்களின் தத்துவப் பகுதிக்கு ஈடானவையாகக் காணப்படுகின்றது.

## கடவுள்

சைவ சித்தாந்தம் ஒரு கடவுள், ஒரேயொரு கடவுள் என எடுகோள் செய்கிறது. கடவுளை எடுகோள் செய்வதுடன் அதற்கு ஆதாரமாகப் பல நியாயங்களையும் அது தருகிறது.

முழுப் பிரபஞ்சமும் மாற்றமடைந்து கொண்டேயிருக்கின்றது. எந்தவொரு மாற்றத்திற்கும் காரணம் இருத்தல் வேண்டும். ஆகவே பிரபஞ்சத்தில் ஏற்படும் மாற்றத்திற்கும் காரணம் இருத்தல் வேண்டும். இந்தக் காரணம் பிரபஞ்சத்திலிருந்து வேறுபட்டதாய் இருத்தல் வேண்டும். எது இந்தமாற்றங்களுக்கு காரணமாகவிருக்கிறதோ அதுவே சைவசித்தாந்தத்தில் கடவுள் என அழைக்கப்படுகிறது.

மாற்றங்களுக்கு உட்படுவது பிரபஞ்சத்தின் இயல்பு எனவும் வெளிக்காரணியொன்று அவசியமல்ல எனவும் வாதிக்கலாம்.[1] ஆனால் மாற்றம் ஒன்றினது இயல்பாக இருக்க முடியாது. ஏனெனில், எல்லாவற்றிற்கும் மேலாக, எந்தவொன்றும் தானாகவே மாற்றமுறுவதை நாம் பார்க்கக் கூடியதாயில்லை. ஒரு வெளிக்காரணிக்கு உட்படுத்தப்பட்டாலன்றி எல்லாமே தாமிருக்கும் நிலையில் மாற்றமடையாது இருந்தவாறேயிருக்கும். இன்னொன்றினால் குளிரவைக்கப்பட்டாலன்றி நீர் பனிக்கட்டியாகாது. நீர் நீராகவே தான் இருக்கும். இரண்டாவதாக, ஒன்றின் இயல்பு தானாகவே மாறுவதாயின், எல்லாமே தொடர்ச்சியாகவும் எழுந்தமானமாகவும் வேறெவற்றிற்கும் சார்பாக அல்லாதும் மாறிக்கொண்டிருப்பதைக் காணக்கூடியதாயிருக்க வேண்டும். ஒரு மனிதன் திடீரெனவொரு தூணாக மாறினால் கூட நாம் ஆச்சரியப்படக்கூடாது. மூன்றாவதாக, ஒரு பொருள் மாற்றமடைவது அதன் இயல்பாக இருக்க வேண்டுமாயின், அது தனது அடையாளத்தை இழந்து விடுவதுடன் அதுமேலும் அப்பொருளாகவிராது இன்னொன்றாகிவிடும். ஆகவே மாற்றம் என்பது ஒரு பொருளின் குணவியல்பாக இருக்க முடியாது. உதாரணமாக, ஒரு சதுரத்தின் செங்கோணங்களுள் ஒன்று கூர்ங்கோணமாக மாறின் அது இப்போ ஒரு சதுரமல்ல. அது ஒரு சாய்சதுரம். ஆனால் நாம் ஒரு சதுரம் சாய்சதுரமாக வருவதை ஒருபோதும் கண்டதில்லை. ஆகவே மாற்றம் ஒன்றினது இயல்பாக முடியாது, பிரபஞ்சத்தில் முழுமையாக ஏற்படும் மாற்றம் அதன் இயல்பு ஆக இருக்க முடியாது. ஆகவே பிரபஞ்சத்தில் ஏற்படும் மாற்றங்கள், பிரபஞ்சம் அல்லாத வேறொன்றினால் ஏற்படுத்தப்படுதல் வேண்டும். இதனை ஏற்படுத்தும் அதுவே கடவுள்.

இந்த அசேதன பிரபஞ்சத்தில் மட்டும்தான் மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதல்ல. ஒருசமயம் இப்புவி சூரியனின் ஒரு பகுதியாகவிருந்தது. பிரிவடையும் போது அதுவொரு எரியும் திணிவாக இருந்திருக்க வேண்டும். அவ்வெரியும் திணிவில் உயிர்வாழ்வு முடியாததாயிருந்தது. ஆனால் இன்று உயிர் வாழ்வைக் காண்கின்றோம். இது ஒரு மாற்றம். உயிரினத்தை மட்டுமல்ல, பிரமிக்கவைக்கும் உருவாக்கமான மனிதர் என்ற உயிரினத்தைக் காண்கின்றோம். மனிதரை மட்டுமல்ல; பிரமிக்கத்தக்க புத்திக்கூர்மையுடைய அயன்ஸ்ரைன், இராமானுஜம், போன்றவர்களைக் காண்கிறோம். உயிரற்ற நிலையில் இருந்து அயன்ஸ்ரைன் போன்ற புத்திக்கூர்மைமிக்க உயிர்கள் வாழும் நிலை வரை ஏற்பட்ட இப்பெருமாற்றங்கள் எல்லாமறிந்த ஏதோவொன்றினால் தான் ஏற்படுத்தப்பட்டிருக்கமுடியும். அதனையே சைவசமயம் கடவுள் என அழைக்கிறது.

## கடவுள் நம்பிக்கையின் தேவை

கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கைக்கு ஒரு காரணம் எங்களையும் எங்கள் உடைமைகளையும் பாதுகாக்க வேண்டிய தேவையிலிருந்து கிடைக்கின்றது. ஒவ்வொருவரும் பாதுகாப்பாக இருக்க விரும்புகின்றனர். ஒவ்வொருவரும் தமது உடைமைகளும் பாதுகாப்பாக இருப்பதை விரும்புகின்றனர். எவரும் தான் கொலை செய்யப்படுவதையோ கொள்ளையிடப்படுவதையோ விரும்பவில்லை. அவனும் அவனது உடைமைகளும் பாதுகாப்பாக இருக்க வேண்டுமாயின், மக்களுக்கு எது சரி எனத் தெரியவேண்டும்; அவர்கள் சரியானதையே செய்யக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். கடவுளில் நம்பிக்கை வைத்து குறித்த ஒரு சமயத்தைப் பின்பற்றும் ஒருவன், அச்சமயத்தில் கூறப்பட்டவற்றில் இருந்து எது சரியென அறிந்து கொண்டு, சரியானவற்றைச் செய்வதற்கு அச்சமயத்தால் கட்டுப்படுத்தப்படுகிறான்.

ஒழுக்க அறிவியல் சரியையும் பிழையையும் வேறுபடுத்திக் காட்டுவதற்கான ஒரு அடிப்படையைக் கண்டுபிடிக்கும் அதன் முயற்சியில் படுதோல்வியடைந்து விட்டது. ஒழுக்கவியலாளர்களால் முன்வைக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுக்கக் கொள்கையும் வழுவழுப்பானதாகவே காணப்பட்டன. நாஸ்திகனொருவனிடம் ''உனதும் உனது உடைமைகளுக்கும் பாதுகாப்பு கோர உனக்கு உரிமை இருப்பது போல மற்றவர்களுக்கும் தமதும் தமது உடைமைகளுக்கும் பாதுகாப்பு கோர உரிமையிருக்கிறது. நீர் அவர்களது கோரிக்கையைக் கௌரவிக்க வேண்டும்'' என நீங்கள் கூறினால் அவன் பின்வருமாறு சொல்ல முடியும்: ''சரி

(06 ம் பக்கம் பார்க்க)

1. **சித்தியார் கூறுகிறது:**
பிரபஞ்சத்திலேற்படும் மாற்றங்கள் அதன் இயல்பு எனக் கூறவேண்டுவையாயின், ஒரு பொருளின் இயல்பில் எதுவித மாற்றமும் இருக்க முடியாது. என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். அதன் இயல்பு அவ்வாறிருப்பதால் அது மாற்றமடைகிறது எனக் கூறின், பின் அதற்கு எதுவித இயல்புமில்லை. ஆகவே அது இல்பொருள்.

**இந்துசாதனத்தின் முன்னாள் கௌரவ பத்திராதிபர்கள் 1889 - 1994**

திரு. த. கைலாசபிள்ளை, திரு. பொ. கார்த்திகேயபிள்ளை, திரு. ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை, திரு. நம. சிவப்பிரகாசம், திரு. மு. மயில்வாகனம், திரு. நம. சிவப்பிரகாசம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ சித்தாந்தத்தின் மகிமை

(05 ம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஒன்று இல்லை. எனது சொந்தம் பாதுகாப்பை நான் கோரவில்லை வல்லமை நான் கணக்கில் எடுக்கப்படுகிறது. எனது உடைமையைப் பாதுகாக்கக் கூடிய வல்லமை என்னிடமில்லையாயின் நான் அவற்றை இழக்கத் தான் வேண்டும். இன்னொருவரது உடைமையை எடுத்துக் கொள்ளக் கூடிய வல்லமை எனக்கிருக்குமாயின், நான் எடுத்துக்கொள்வேன். வலிமை என்னும் போது எனது சொந்த வலிமையுடன் எனக்கு உதவுபவர்களின் வலிமையையும் சேர்த்துத்தான் கூறுகிறேன். அரசு எனது பக்கம் இருக்குமாயின் அரசபலத்தையும் சேர்த்துத்தான் கூறுகிறேன். எனது நலன்களுக்கு உதவுமாயின், எனது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டால், நான் கொலை செய்யவோ, கொள்ளையடிக்கவோ, களவெடுக்கவோ, வீடொன்றை உடைக்கவோ, அதனைத் தீயிலிடவோ செய்வேன்'' நாகரிகம் மிக்க நாடுகளெனப்படும் இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் ஜேர்மனி போன்ற நாடுகளே தமது வலிமைதான் ''மேலான மத்தியஸ்தன்'' என்ற அடிப்படையில் இந்நூற்றாண்டில் இரண்டு உலகமகாயுத்தங்களை நடாத்தியுள்ளன. உணர்வுள்ள எந்த மனிதனும் ''மற்றவர்கள் உனக்கு எவற்றைச் செய்ய வேண்டுமென நீ எதிர்பார்க்கிறாயோ அவற்றையே ஏனையோருக்கு நீ செய்'' என்ற உனது உறுதிமொழியை ஏற்கமாட்டான். இது தளர்ந்த, வீரியமற்றவனின் உறுதிமொழி.''

உனது காரணங்காட்டும் வழியைப் பார்த்தால் உனக்குள்ள அதேயளவு வாழும் உரிமை ஒரு ஆட்டுக்கும் உண்டு. ஆனால் நீ அதைக் கொன்று தின்கிறாய். ஏனெனில் அதைச் செய்யும் வலிமை உன்னிடம் உண்டு. ஒரு நாஸ்திகன், ஒழுக்கத்திற்கு மதிப்பளிக்கும் கட்டுப்பாட்டுக்குள் இல்லை.[2] ஒழுக்க விதிகள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு கடவுள் உண்டு என்பதும் அவரால் அருளிச் செய்யப்பட்டவைகளும் எடுகோள் செய்யப்பட வேண்டும். ''இறைவன் சொன்னவிதி அறம்'' என்கிறது சித்தியார். இது தொடர்பாகப் பார்க்கும் போது சைவசமயம் மட்டுமே கொலை, புலாலுண்ணல், மது அருந்தல் உட்பட எல்லாப்பிழைகளையும் தடை செய்கிறது என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியது.

ஆனால் வேறுசிலர் மிகவும் வசதியாகப் பின்வருமாறு கூறுவர்: ''எனக்குக் கடவுள் தேவை இல்லை. என்னிடம் மனச்சாட்சியுண்டு. அது சரியெது பிழையெது என எனக்குக் கூறுகிறது. அதற்கு அமைவாக நடக்க நான் உறுதி பூண்டுள்ளேன்'' ஆனால் மனச்சாட்சி என்பது ஓர் கற்பிதம். மனிதனொருவன் தனது குறிக்கோள்கள், அறிவு ஆகியவற்றைக் கொண்டு தனது புத்தியினால் மேற்கொள்ளும் முடிவையே மனச்சாட்சி என்கிறான். ஒரு காலத்தில் இலஞ்சம் பெறுவதை முற்றாக வெறுத்துப் பின்னர் இலஞ்சத்தின் அவாவுள்ள உபாசகராகிய பலர் இருந்திருக்கிறார்கள். இதனை மனச்சாட்சியின் அடிப்படையில் கூறுவதாயின் ஒரு சமயம் அவர்களது மனச்சாட்சி இலஞ்சம் வாங்குவதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் பிறிதொரு சமயம் அதை ஏற்றுக்கொண்டது. அசைவ உணவு உண்பவர்கள் பலர் சைவ உணவு உண்பவர்களாகியிருக்கிறார்கள். அதாவது ஒரு சமயத்தில் அவர்களது மனச்சாட்சி புலாலுண்பதை ஏற்றுக்கொண்டது. இன்னொரு காலகட்டத்தில் அதைக் கண்டித்தது. அரசியல் நோக்கங்களுக்காகக் கொலை செய்வதை ஒரு மனிதனின் மனச்சாட்சி அங்கீகரிக்கிறது. இன்னொரு மனிதனின் மனச்சாட்சி வெறுக்கிறது. ஆகவே மனச்சாட்சி என்பது ஒரே மனிதனிலேயே காலத்திற்குக்காலம் மாற்றமடைகிறது. வெவ்வேறு மனிதர்களிடையே ஒரு சமயத்திலேயே மாற்றமடைகிறது. ஆகவே மனச்சாட்சி என்பது முற்றுமுழுதாகத் தங்கியிருக்கக் கூடியதொன்றல்ல. ஆகவே ஒழுக்கம் சமயத்தில் மட்டுமே தங்கிருக்க முடியும். ஒழுக்க வாழ்வு பேணப்படுவதற்குக் கடவுள் இருக்கிறார் என்ற கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

### கடவுள் ஒருவரே

கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கையின் தேவையை எடுத்துக்காட்டிய எமது சித்தாந்தம் ஒரு கடவுள் மட்டுமே இருக்க முடியுமெனக் கூறுகிறது. பிரபஞ்சத்தில் ஏற்படும் மாற்றத்தினை விளக்கும் எமது முயற்சியில், கடவுள் இருக்கிறார் என்ற முடிவுக்கு வந்தோம். ஆகவே கடவுள் தான் பிரபஞ்சத்தை இயக்குபவர். ஆகவே பிரபஞ்சத்தைக் கட்டுப்படுத்தும் / இயக்கும் வெவ்வேறு இரண்டு சுயதீனமானவர்கள் இருக்க முடியாது. ஆகவே வேதங்கள் கூறுகின்றன ''ஒரு கடவுளே இருக்கிறார்; ஆனால் ஞானிகள் அக்கடவுளைப் பல பெயர்கள் கொண்டு அழைக்கிறார்கள்.[3] ''

### ஆன்மாக்கள் அழிவற்றன

சைவத்தின் அடுத்த போதனை நாமெல்லாம் ஆன்மாக்கள். ஆன்மாக்கள் உண்மையானவை. உண்மையான

(07 ம் பக்கம் பார்க்க)

2. ஆனால் நீதி நியாயமுள்ளவர்களாக மட்டுமின்றி ஆத்மபரித்தியாகம் செய்பவர்களுமாயுள்ள கடவுள் நம்பிக்கையற்றவர் (நாஸ்திகர்) களும் இருக்கிறார்கள். இது அவர்களின் பிரிக்கவொண்ணா இயல்பு, அவர்களின் பண்பாடு, அவர்களுடன் கூடவுள்ளவர்களின் உயர்ந்த ஒழுக்கம் போன்றவற்றால் ஏற்பட்டதாகும். கூடாத இயல்பு, பண்பாடு போன்றவற்றின் விளைவாக ஒழுக்கங்கெட்ட கடவுள் நம்பிக்கையுள்ளவர் ( ஆஸ்திகர் ) களும் இருக்கிறார்கள்.

3. உமை, விநாயகர், சுப்பிரமணியர் ஆகியவை சிவனின் வெவ்வேறு குண இயல்புகளைக் குறிக்கும் பெயர்கள்

The Former Editors of Hindu Organ 1889 - 1994

M/s T. Sellapapillai, A. Kathiravelu, Hon A. Sabapathy, M. S. Eliathmby, M. Sabarathasinghe M. S. Rajaratnam, M. S. Eliathamby, V. Nagalingam, A. V. Kulasingham, T. Mathusamipillai and R. N Sivapiragasam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சித்திரா பூரணை

பூரணை விரதமும் அமாவாசை விரதமும் பிதிரர்க்குரிய விரதங்கள். நம் முன்னோர்களை நினைவு கூர்ந்து நன்றிக்கடன் செலுத்தும் நாட்கள் பூரணை, அமாவாசைத் தினங்கள். பூரணை விரதம் தாய் வழியினருக்காக அனுட்டிக்கப்படும் விரதம். அமாவாசை விரதம் தந்தை வழியினருக்காக நோற்கப்படும் நோன்பு. சோதிடவியலாளர் சந்திரனை மாதுருகாரகன் எனவும் சூரியனை பிதுர்க்காரகன் எனவும் அழைப்பர். பூரணைகளுள் உத்தராயணத்தில் வரும் சித்திரைப் பூரணையும் தெட்சணாயணத்தில் வரும் ஐப்பசி பூரணையும் சிறந்தன. இந்த போன்று ஆடி அமாவாசையும் தை அமாவாசையும் சிறப்புடையன. ஆகவே ஒவ்வொருமாதப் பூரணைக்கும் அமாவாசைக்கும் விரதமிருக்க முடியாதவர்கள் சித்திரா பூரணையையும் ஆடி அமாவாசையையும் தவறவிடுவதில்லை.

நமது நாள் காட்டியில் ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாள். சித்திரை மாதம் தேவர்களுக்கு நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 2 மணிவரையுள்ள மத்தியானப் பொழுது. மத்தியான வேளையே பிதிரர்களுக்குரிய காலமாதலால் சித்திரை மாதம் பிதிர்க்கடனுக்கு விசேடமுடையதாகிறது.

சித்திரை நட்சத்திரத்தில் பூமி மேடராசியில் சஞ்சரிக்கும். சந்திரன் சித்திரை நட்சத்திரத்தோடு கூடி சித்திரை நட்சத்திரத்திற்குரிய துலா இராசியில் சஞ்சரிப்பான். மேடத்துக்கு துலாம் ஏழாம் இடம். பூமிக்கு ஏழாம் இடத்தில் நிற்கும் சந்திரன் முழு வலிமை பெறுகிறான். இந்நாள் வருடத்தில் ஒரு தடவை ஏற்படும். ''பருவங்களுள் சிறந்த வசந்தகாலமும் மாதங்களுள் சிறந்த சித்திரையும் திதிகளுள் சிறந்த பூரணையும் கூடிய சித்திரா பூரணையன்று செய்யப்படும் வழிபாடு வருடம் முழுவதும் செய்யப்படும் வழிபாட்டிற்குச் சமம்'' என இந்திரனுக்கு மதுரை சுந்தரேஸ்வரப் பெருமான் திருவாய் மலர்ந்தருளியதாக திருவிளையாடற் புராணம் கூறுகிறது. மதுரையில் நடைபெறும் சித்திரைப் பெருவிழா பிரசித்தமானது.

சித்திரா பூரணையன்று புண்ணிய தீர்த்தமொன்றில் தீர்த்தமாடி விரதமிருந்து பிதுர்க் கடமைகள் செய்வதால் பிதிரர்கள் நலமடைவர்.

எமது பாவ புண்ணியக் கணக்குகளையெல்லாம் எழுதுபவர் சித்திர புத்திர நாயனார் எனப்படுபவர். குழந்தைப் பேறு வேண்டி இந்திரனும் இந்திராணியும் செய்த தவத்திற்கு இரங்கி, சிவபெருமான் சித்திர புத்திரரை இந்திரனுக்குப் புத்திரனாகப் பிறக்க அருள் புரிந்தார். சித்திர புத்திரனார் காமதேனு வயிற்றில் உதித்தார். இக்கதை சித்திரா பூரணையன்று கோவில்களில் படிக்கப்பட்டு கஞ்சி காய்ச்சிப் படைக்கப்பட்டு அன்னதானங்கள் நடைபெறும். இது சித்திரைக் கதை எனவும் சித்திரைக் கஞ்சி எனவும் வழங்கப் பெறுகிறது.

---

## சைவத்தின் மகிமை

(06 ம் பக்கத் தொடர்ச்சி)

வொன்று எதுவுமற்றதிலிருந்து வருதல் இயலாது. ஆனால் கலப்பில்லாதவொன்று அழிவற்றதாயிருத்தல் வேண்டும். ஆன்மா கலப்பற்றதாகையால் அது அழிவற்றது.

ஆன்மா உள்ளதென்பதை மறுப்பவர்களும் உள்ளனர். இவர்கள் உடம்பையே தனித்தனியானதாகக் கொள்வர். இவர்கள் மூளையின் நரம்புத் தொகுதியே சிந்திப்பதாகக் கொள்வர். நரம்புகள் இரசாயன விளைவுகள் மட்டுமே. ஆகவே அவை அறிவற்றன. ஒருவன் பலதடவை ''பன்னீர் ஏழுஎண்பத்து நான்கு'' எனத் திரும்பத் திரும்பக் கூறுவானாயின் அவன் பன்னிரண்டு தர ஏழு எத்தனை என அறிய விளையும் சமயங்களிலெல்லாம் இந்த உண்மை அவனுக்கு வரும். ஆனால் இப்படியான பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது மூலம் சிக்கலானவொரு கணிதப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது, இவ்வகையான வேலையைச் செய்ய உடம்பு தவிர்ந்த வேறொன்று இருத்தல் வேண்டும். எது இந்த வேலையைச் செய்கின்றதோ அதைச் சைவசித்தாந்தம் ஆன்மா எனக் கூறுகிறது.

இன்னொருவகைச் சித்தாந்திகள் பிரச்சினைக்குரிய தீர்வுகளை மனதாற் செய்யமுடியுமெனவும் இதனிலிருந்த ஆன்மா உள்ளது என்பது பெறப்படமாட்டாது எனவும் கூறுவர். சைவசித்தாந்தம் இதற்குக் கூறும் விடை மனம் ஒரு கருவி மட்டுமே; அது ஒரு காரணன் அல்ல என்பதாகும். நாம் எமது மனதைப் பலவழிகளில் கட்டுப்படுத்துகிறோம். மனம் சோம்பியிருக்க விருப்பமுடையதாயிருக்கும் போது, சில சமயங்களில் நாம் கையிலுள்ள வேலையைச் செய்து முடிக்கப் பலவந்தப்படுத்துகிறோம். ஆகவே மனம் ஒரு கருவிதான். அது ஒரு காரணன் அல்ல. அந்தக் காரணியையே எமது சித்தாந்தம் ஆன்மா என்கிறது. மனதும் உடம்பும் அதன் கருவிகள்.

### ஆணவம்

எமது அறிவு ஒரு குறுகிய எல்லைக் குட்பட்டது என்பதையும் காண்கின்றோம். பெரும் விஞ்ஞானிகளே விளக்க முடியாத பல தோற்றப்பாடுகள் உள்ளன. ஆகவே நாம் எல்லாம் அறிந்தவர்கள் அல்ல. ஆனால் நாம் மனிதரில் வேறுபடும் அளவிலான அறிவைக் காண்கிறோம். காட்டுவாசியிடம் துளியறிவையும், சாதாரண பட்டதாரியொருவரிடம் கிணற்றளவு அறிவையும், பேராசிரியரொருவரிடம் கடலளவு அறிவையும், சர் இராமன் போன்றவொருவரிடம் சமுத்திரமளவு அறிவையும் காணும்போது ஆன்மா எல்லாம் அறிந்தவொரு நிலையை அடையக் கூடியது என்பதை நாம் அனுமானிக்கக் கூடியதாயுள்ளது. மனிதர் உண்மையில் எல்லாம் அறிந்தவர்கள் அல்லர். ஆதலின் எல்லாமறியும் நிலைமையடையாது ஆன்மாவை அடக்கிவைத்திருக்கும் ஏதோவொன்று இருத்தல் வேண்டும். அதனை சித்தாந்தம் **ஆணவம்** என்கிறது.

### மாயை

எமது சித்தாந்தத்தின் அடுத்த பாடம் சடமான (உயிரற்ற) பிரபஞ்சத்தின் அறக்கடைசியான மூலம் பற்றியதாகும். ஒரு சமயம் பௌதிகப் பிரபஞ்சத்தின் அறக்கடைசியான மூலம் அணுக்கள் எனக் கொள்ளப்பட்டது. ''அணுக்கள் தாம் அறக்கடைசியான மூலமாக இருக்கமுடியாது. ஏனெனில் அவைகளும் [அணுக்களும்] வேறு பொருட்களின் சேர்க்கையே'' என்கிறது சித்தியார்.

''காரிய மென்பதென்னை காரண
அனுவை யென்னிற்
காரியம் அவயவத்தாற் கண்டனம்''

அறக்கடைசியான மூலமானது சேர்க்கையற்றவொரு பொருளாதல் வேண்டும். இதனை மாயை என எமது சித்தாந்தம் அழைக்கிறது. (வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்து சாதனம்

பிரமாதி வரு சித்திரை மீ 17 உ (30-04-1999)


# விழித்தெழுங்கள்

சைவசித்தாந்தக் கொள்கைகளைப் பரப்பவும், இலங்கை வாழ் சைவப்பெருமக்களது – சிறப்பாக யாழ்ப்பாணம் வாழ் சைவமக்களது - நலன்களைப் பாதுகாக்கவும் இற்றைக்கு நூற்றுப் பதினொரு வருடங்களுக்கு முன் 29-04-1888 ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்டது யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை. சபையின் சைவப்பணிகளுக்கும் சமயப் பிரசாரத்திற்கும் உறுதுணையாகவும் சைவப் பெருமக்களின் ஏகோபித்த குரலாகவும் 11-09-1889 முதல் ஒலித்து வந்தது இந்துசாதனம் -Hindu Organ பத்திரிகைகள். யாழ்ப்பாணத்திலுள்ள அச்சியந்திர சாலைகளுள் மிகப்பழமையானதும் பெரியதுமான சபைக்குச் சொந்தமான சைவப்பிரகாச அச்சியந்திர சாலையிலேயே இப்பத்திரிகைகளும், சபையினால் வெளியிடப்பட்ட சைவசமய நூல்களும் அச்சிடப்பட்டன. 1995 ஆம் ஆண்டுப் பிற்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்ட மக்கள் இடப்பெயர்வுடன் சைவப்பிரகாச அச்சியந்திர சாலை செயலிழந்தது. இந்துசாதன - Hindu Organ பத்திரிகை வெளியீடும் தடைப்பட்டது. அச்சு இயந்திரசாலையை இயக்க வைப்பது காலதாமதமாகலாம் அது வரை பத்திரிகை வெளியீட்டை நிறுத்தி வைத்திருப்பது உசிதமல்ல - இப்பத்திரிகைக்கு ஒரு தேவையிருக்கிறது என்பது பெரிதும் உணரப்பட்டதால் பத்திரிகையை வேறு அச்சு யந்திரசாலையில் அச்சிட்டு வெளிக்கொணர்கிறோம்.

சொந்தமாக ஒரு அச்சுக் கூடமின்றி வாரப்பத்திரிகை ஒன்றை நடாத்துவது இலகுவானதொன்றல்ல. ஆகவே இப்போதைக்கு இந்துசாதனம் -Hindu Organ இரண்டையும் ஒன்று சேர்த்து மாதமொரு முறை - பூரணைதோறும் - வெளிக்கொணரத் தீர்மானித்துத் திருவருள் துணை கொண்டு உங்கள் அபிமான இந்துசாதனம் - Hindu Organ ஐச் சித்திரைப் பூரணை நன்னாளில் மீண்டும் உங்கள் கரங்களில் தவழ விடுவதில் மகிழ்ச்சியடைகிறோம். எம்பெருமான் திருக்கருணையாலும் உங்களுடைய ஆதரவினாலும் இப்பத்திரிகை சைவ பரிபாலன சபை தனது குறிக்கோள்களை எட்ட உதவும் சாதனமாகவும் இலங்கை வாழ் சைவப்பெருமக்களின் குரலாகவும் உரத்து ஒலிக்க திருவருள் புரிய வேண்டுமென்று எல்லாம் வல்ல நடராஜப்பெருமானைப் பிரார்த்தித்து உங்கள் ஆதரவை வேண்டி நிற்கிறோம்.

நாவலர் காலத்தில் சைவ சமயத்தவரை எதிர்நோக்கிய பிரச்சனைகள் ஏராளம். அதைத் தனியொருவராக நின்று எதிர்த்துப் போராடியவர் நாவலர் பெருமான். சைவ பரிபாலன சபை போன்றதோர் அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் நாவலர் பெருமான் உள்ளத்தே உதித்துப் பின் அவர்வழி வந்த அன்பர்களால் அவர் எம்மை விட்டுப் பிரிந்து பத்து ஆண்டுகள் கழிந்தபின் தோற்றுவிக்கப்பட்டது இன்று சைவசமூகம் இருக்கும் நிலையும் எதிர்நோக்கும் பிரச்சனைகளும் நாவலர் காலநிலையை விடச் சிறந்தது எனக்கூறுவதற்கில்லை.

திருக்கேதீசுவரம் இருக்கும் நிலையை எண்ணிப் பார்க்க மனம் கூசுகிறது. அரசியல் சூதாட்டத்தில் மக்கள் பகடைக் காய்களாக்கப்பட்டு வாழ்விழந்து அல்லற்படுகின்றனர். அவர்களுக்கு கைகொடுக்க வேண்டியது இன்றைய அவசியத் தேவை. அதை முன்னெடுக்க வேண்டும். மக்களின் அல்லலைத் தமக்குச் சாதகமாக்கி அவர்களுக்கு உதவுகிறோம் என்ற போர்வையில் வெளிநாடுகளிலிருந்து கோடிக்கணக்கான பணத்தைப்பெற்று பொருளையும் பணத்தையும் காட்டி மயக்கி, மதமாற்ற நடவடிக்கைகளில் பல குழுக்கள் ஈடுபட்டிருக்கின்றன. நகுலேசுவரம், மாவிட்டபுரம், கீரிமலைபோன்ற புனித இடங்கள் அமைந்த வலிகாமம் வடக்கின் பெரும்பகுதி நிரந்தர இராணுவ பிரதேசமாகும் அறிகுறிகள் தென்படுகின்றன. இவற்றிற்கு எதிராகப் போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

பதினைந்து வருடகால அல்லோல கல்லோலத்தின் பின்னரும் மக்கள் திருந்திய பாடாகவில்லை.கோயில்களில் உயிர்ப்பலி இன்னும் முற்றாகக் கைவிடப்படவில்லை. கைவிடப்பட்ட சில ஆலயங்களில் அது மீண்டும் தலை காட்டப் பார்க்கிறது. கோயில் நிர்வாகம் சம்பந்தமான வழக்குகள், சச்சரவுகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. கோயில்கள் வியாபார நிலையங்களாக மாறிவருகின்றன. பணத்தைக் கொடுத்து பூசகர் என்ற ஊடகம் மூலம் இறையருளைப் பெறலாம் என்ற மாயை பெருகி வருகின்றது. சைவசாதனை அருகி வருகிறது. ஆலய பரிபாலனமென்பது சங்கக் கடையும் சனசமூக நிலையமும் நிர்வகிப்பது போன்றதொன்றென்ற எண்ணம் தலைதூக்கியுள்ளது. இவர்களுக்குச் சரி பிழைகளை எடுத்துரைத்து நல்வழி செல்ல வைக்கக்கூடியதான பிரசார நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட வேண்டியது அவசியம்.

இவ்வாறான காலகட்டத்தில், உண்மைச் சமயிகள் பலரும் இச்சமூகக் கடமையிலிருந்து விலகியிருப்பது நல்லதல்ல. சைவ சமய வளர்ச்சிக்கும், சைவர் நலக் காப்புக்கும் அவர்களது பங்களிப்பு அவசியம் வேண்டப்படும் காலமிது. ''அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்ச வருவதுமில்லை'' என்றும் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்றும் வீரமுழக்கமிட்டுச் சைவப்பயிர் காத்த அப்பர் சுவாமிகளின் குருபூசையை கொண்டாடவிருக்கும் இவ்வேளையில், சைவசமூகம் எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து சைவ மக்களுக்கு உண்மைச் சமயத்தைப் போதித்து, அவர்கள் நலன்களைப் பேணும் பணியில் ஈடுபட உண்மைச் சமயிகள் அனைவரையும் விழித்தெழுந்து வாருங்கள் என அன்புடன் அழைக்கின்றோம். அவர்கள் பணிக்கு இந்துசாதனம் ஒரு ஊடகமாகவிருந்து செயற்படப் பரம்பொருளை இறைஞ்சி வேண்டுகிறோம்.

''இன்பமே எந்நாளும் துன்பமில்லை''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களில் உயிர்ப்பலியை நிறுத்துங்கள்

## அன்பை அடிப்படையாகக் கொண்ட சமயத்தில் இக்கொடுமைக்கு இடமில்லை

யாழ்ப்பாணத்திலுள்ள கோயில்கள் சிலவற்றிலே ஆடு, கோழிகளைப் பலியிடும் வழக்கம் சில ஆண்டுகள் இடைவெளிக்குப் பின் மீண்டும் தலைதூக்கியுள்ளது. இது அருவருக்கத் தக்க, சமயசம்பந்தமற்ற காட்டுமிராண்டித் தனமான செயல். இப்பாதகத் தொழில் சைவசமயக் கோட்பாடுகளுக்கு விரோதமானது. இன்றைய கல்வி நிலையிலும் பண்பாட்டு நிலையிலும் இவ்வழக்கம் தொடர்வது சைவ சமூகத்துக்கு இழுக்கைத் தருகிறது. உயிர்ப்பலிக்கு எந்தச் சமய நூலிலும் விதி இல்லை.

சைவாகமங்கள் எதிலுமே உயிர்ப்பலி விதிக்கப்படவில்லை. பன்னிரு திருமுறைகளிலோ பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்களிலோ உயிர்ப்பலி பற்றிக் கூறப்படவில்லை.

சைவசமயம் இந்து சமயத்தின் பல்வேறு பிரிவுகளுள் ஒன்று. ஆதிசங்கரர் இந்து சமயத்தின் ஆறு பெரும் பிரிவுகளை ஒன்று சேர்த்து ஷண்மத ஸ்தாபகர் ஆனார். அப்படியானால் சைவசமயக் கோட்பாட்டிற்கு விரோதமான பலியிடுதல் இந்துசமயத்தின் ஏனைய பிரிவுகளெதற்கும் ஏற்புடையதோ என வினவலாம். ''நிச்சயமாக இல்லை'' என்பதுவே இதற்கு விடை. 'இந்து' என்ற பெயர் எப்படி வந்தது எனப் பலரும் ஆராய்ந்திருக்கலாம். சிலர் இந்திய நாட்டினரின் மதமாதலால் இந்து மதம் எனப்பட்டதென்பர். வேறு சிலர் சிந்து நதிக்கரை மக்களின் சமய மாதலால் இந்து மதமெனப்பட்டதென்பர். ஆனால் இவையெதுவும் உண்மையல்ல. ஹிந்து என்பதற்கான பொருளை ஐயாயிரமாண்டு பழைமை வாய்ந்த உபநிடத வாக்கியம் கூறுகிறது.

''ஹிம் ஸாயாம தூய தேயஸ
ஸ ஹிந்து ரீதய பீதியதே''

இதன் பொருள் ஹிம்சை என்பதில் எவன் துன்பப்படுகிறானோ அவன் ஹிந்து என அழைக்கப்படுகிறான் என்பதாகும். அதாவது பிறவுயிர் வருந்துவதைக் கண்டு துன்பப்படுகிறவனே இந்து என்பதாம். ''காயமே கோயிலாக'' என்றும் ''ஊனுடம்பு ஆலயம்' எனவும் சமயாசாரியர்களால் பேசப்பட்டபடி, எவ்வுயிரும் பரம்பொருளின் சந்நிதி, உயிருறையும் உடலெல்லாம் ஈசன் திருக்கோயில் எனக் கொண்டு ''அன்பே சிவம்'' என்றவாறு எவ்வுயிரினிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்ட சமயமே இந்து சமயம்.

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே''.

என்று திருமூலர் கூறியாங்கு அன்பே கடவுள் எனக் கொள்ளும் அன்பு மதமே இந்து மதம். ஆகவே இந்து மதத்தின் எந்தப் பிரிவிலும் சரி இறைவன் சந்நிதியில் மட்டுமல்ல வேறெங்கு தானும் உயிர்களைப் பலியிட இடமில்லை.

சமயத்திற்குச் சற்று வெளியே சென்று நோக்குவோம். திருவள்ளுவரை அவர் ஒரு இந்துவல்லர் என்று கூறுவோருமுளர். ஆனால் திருக்குறளை தமிழில் உள்ள அதி சிறந்த நூலாக — தமிழ் இனத்திற்கு மட்டுமல்ல — உலகம் முழுவதற்கும் ஏற்புடைய ''உலகப் பொதுமறை'' யாகப் போற்றிப் பெருமைப்பட எந்தவொரு தமிழனும் பின் நிற்பதில்லை அந்தப் பொய்யாமொழிப் புலவர் திருக்குறளில் ''கொல்லாமை'' என்று ஒரு அதி[காரத்]தையே வகுத்து உள்ளார்.

''தன்உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை.''

உனது உயிரே போக வேண்டிய நிலை ஏற்படி[னும்] பிறிதோர் இன்னுயிரை அதன் உடம்பிலிருந்து நீ[க்கும்] தொழிலைச் செய்யாதே என்கிறார் பொய்யா மொ[ழியார்].

''கொல்லாமை'' என்ற அதிகாரத்துடன் வ[ள்ளுவர்] நின்றுவிடவில்லை. ''புலான் மறுத்தல்'' என்ற அதிகாரமும் திருக்குறளை அலங்கரிக்கிறது.

''கொல்லான் புலாலை மறுத்தானைக் கை
எல்லா உயிரும் தொழும்''

என்பது வள்ளுவர் மொழி. இங்கு வள்ளுவர் ஒ[ரு படி] மேலே செல்கிறார். கொல்லாதவனை மட்டுமல்ல; கொ[லை] செய்யப்பட்டமையால் கிடைத்த புலாலை உண்ணா[தவ]னையும் உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் இருகை [கூப்]பித்தொழும் என்கிறார். ''கொல்லாமற் கொன்ற[தைத்] தின்னாமல்'' என்ற பட்டணத்தடிகள் வாக்கும் [இதனுடன்] ஒப்பு நோக்க வேண்டியது. சிலர் ''நாம் கொலை [செய்]வதில்லை; யாரோ கொலை செய்ததால் கிடை[த்த] புலாலை விலைக்கு வாங்கி உண்ணுகிறோம். ஆ[கவே] நாம் ஒரு பாவமும் செய்யவில்லை'' எனச் சமாதா[னம்] கூறுவர். இந்த விதண்டா வாதத்துக்கு வள்ளுவர் [சா]டையடி கொடுக்கிறார்.

''தினற்பொருட்டாற் கொல்லாது உலகெனின் ய[ாரும்]
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்''

என்பது அவர் வாக்கு

ஆகவே இந்து சமயத்திலோ அன்றி அதன் ஒரு [அங்]கமான சைவ சமயத்திலோ அல்லது வள்ளுவர் கா[ட்டும்] அறநெறியிலோ ஹிம்சைக்கு இடமேயில்லை. அஹி[ம்சை] நெறியே - அன்பு நெறியே எமது நெறி. கொல்லா[மையும்] புலாலுண்ணாமையும் இவ்வளவு தூரம் வலியுறுத்த[ப்பட்]டிருக்க - எல்லா உயிர்களிலும் உயிருக்குயிராய் விள[ங்கும்] இறைவன் சந்நிதியில் மிருகங்களைப் பலியிடுவது [எத்]துணைப் பெரும் பாவம். அன்பு வெள்ளம் ஓடு[ம்] ஆலயத்தில் உதிரவெள்ளம் ஓடலாமா?

சைவர்களே! இந்துக்களே! வள்ளுவரைத் தந்து கொண்ட தமிழைப் பேசுபவர்கள் எனப் பெருமை [கொள்ளும்] தமிழ் மக்களே! சற்றுச் சிந்தியுங்கள். வாயில்லாப் பிர[ாணி]களான ஆடு, கோழிகளை உங்கள் சொந்தப் பிள்ளை[கள்] போல் நல்ல உணவு கொடுத்து வளர்க்கிறீர்கள். கொ[ழுக்க] வைக்கிறீர்கள். ஒரு வருட காலம் வரை இப்படிச் [செய்து] விட்டு, எல்லாவுயிர்களுக்கும் அன்னையாய், அப்ப[னாய்] விளங்கும் இறைவன் சந்நிதிக்கு அழைத்துச் செ[ன்று] தேகத்தைத் தடவிக் கொடுத்து உணவூட்டிய அ[தே கை]யால் ஆட்டுக்கடாக்களை ஈவிரக்கமின்றிக் கொடிய [வாள்]யால் வெட்டுவது எவ்வளவு கொடிய செயல். அ[ந்தப்] பிராணிகள் அம்மா என்றலறும் போது உங்கள் [மனம்] கலங்குவதில்லையா? அந்த அளவுக்கு உங்கள் [மனம்] கல்லா? சிந்தியுங்கள், சிந்தியுங்கள், மனம் இளகு[ங்கள்]. உயிர்ப்பலியை சைவ ஆலயங்களில் தடைசெய்யச் சட[்டம்] கொண்டு வரும் நிலையொன்றை ஏற்படுத்தாதீர்க[ள்].



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ நெறித் தேர்வு - 1998

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் 1998 ஆம் ஆண்டு நடாத்தப் பட்ட சைவ நெறித் தேர்வில் அகில இலங்கைப் பரிசு பெறுபவர்களுக்கு சபை நடாத்தும் அகில இலங்கைச் சைவமகாநாட்டின் இறுதி நாளாகிய 9-05-99 ஞாயிற்றுக்கிழமை யாழ். கல்விப்பணிப்பாளர் மாநிதி நா. தணிகாசலம்பிள்ளை அவர்களால் பரிசில்கள் வழங்கப்படும். முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக முறையே தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்படும்.

## பரிசு பெறுவோர் விபரம்

ஆண்டு: 2 செல்வி க. அபிராமி 1ம் பரிசு
யா/ நெல்லியடி மெ. மி. த. க. பா
செல்வி தி. பிரியங்கா 2ம் பரிசு
யா /உடுப்பிட்டி மகளிர் கல்லூரி,
செல்வன் கு. நிரோஜன் 3ம் பரிசு
யா/ புனித ஜோன் பொஸ்கோவித்தி.

ஆண்டு: 3 செல்வி ம. சாம்பவி 1ம் பரிசு
யா/ சென்பெனடிக்ஸ் றோ. க. த. க. பா
செல்வி ச பிரியா 2ம் பரிசு
யா/ ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் பா
செல்வி கு. கோபிகா 3ம் பரிசு
யா/ இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

ஆண்டு: 4 செல்வி தி. கீதாஞ்சலி 1ம் பரிசு
யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
செல்வி அ. டில்லிபவீனா 2ம் பரிசு
யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
செல்வன் த. சித்தார்த்தன் 3ம் பரிசு
யா/ நெல்லி. மகாஜனாக் கல்லூரி

ஆண்டு: 5 செல்வன் த. பாலரூபன் 1ம் பரிசு
கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
செல்வன் தி. பிரசாந் 2ம் பரிசு
யா /இந்து ஆரம்ப பாடசாலை
செல்வி இ. சலேமிக்கா 3ம் பரிசு
வ. விபுலானந்த ம. வி.

ஆண்டு: 6 செல்வன் செ. பிரவினா 1ம் பரிசு
யா/ விக்கினேஸ்வரக் கல்லூரி
செல்வன் த. தவராசா 2ம் பரிசு
யா/ வடமராட்சி ம. ம. கல்லூரி
செல்வி இ. குகப்பிரியா 3ம் பரிசு
யா/ யாழ்ப்பாணக் கல்லூரி

ஆண்டு: 7 செல்வி ம. திருமகள் 1ம் பரிசு
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி
செல்வி ப. சிவநந்தினி 2ம் பரிசு
யா/ வேம்படி மகளிர் கல்லூரி
செல்வி சி. மயூரஜீவா 3ம் பரிசு
யா /சங்கானை சிவப்பிரகாச ம. வி.

ஆண்டு: 8 செல்வி வி. கௌசல்யா 1ம் பரிசு
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
செல்வன் அ. கஜீவன் 2ம் பரிசு
யா/ உசன் இராமநாதன் கல்லூரி
செல்வி இ. தனுஷா 3ம் பரிசு
யா/ மானிப்பாய் மெமோறியல்

ஆண்டு: 9 செல்வி ச. சிம்மகி 1ம் பரிசு
யா/ ஞானச்சாரியார் கல்லூரி
செல்வன் ரா. மயூரன் 2ம் பரிசு
யா/ இந்துக் கல்லூரி
செல்வி சி. கோபிகா 3ம் பரிசு
யா/ உடுவில் மகளிர் கல்லூரி

ஆண்டு: 10 செல்வி செ. காயத்திரி 1ம் பரிசு
யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாட.
செல்வி மு. கீதா 2ம் பரிசு
யா/ வேம்பொடு கேணி
செல்வி சி. வினோதா 3ம் பரிசு
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி

ஆண்டு: 11 செல்வி து. சௌமியா 1ம் பரிசு
யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
செல்வி க. வினோதினி 2ம் பரிசு
யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி
செல்வி ம. சர்மினா 3ம் பரிசு
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி

ஆண்டு: 12 இந்து நாகரிகம்
செல்வி ச. ஜெயலதா 1ம் பரிசு
யா/ மகாஜனாக் கல்லூரி
செல்வி தெ. சுகந்தினி 2ம் பரிசு
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி
செல்வி ந. தமிழ்ச்செல்வி 3ம் பரிசு
யா/ இந்து மகளிர் கல்லூரி

ஆண்டு: 12 இந்து சமயம்
செல்வன் வ. பாலேஸ்வரன் 1ம் பரிசு
யா/ வரணி ம. வி
செல்வி இ. ஜெயவதனா 2ம் பரிசு
யா/ வீரசிங்கம் ம.வி
செல்வி இ. லாவன்யா 3ம் பரிசு
யா/ இந்து மகளிர் கல்லூரி

ஆண்டு: 13 இந்து நாகரிகம்
செல்வி வி. சைவினி 1ம் பரிசு
யா/ மகாஜனாக் கல்லூரி
செல்வி க. துஷாந்தி 2ம் பரிசு
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி
செல்வன் வே. கமலரூபன் 3ம் பரிசு
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

ஆண்டு: 13 இந்து சமயம்
செல்வி இ. தவறூபி 1ம் பரிசு
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி
செல்வி ந. கௌசல்யா 2ம் பரிசு
யா/ ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி
செல்வி ச. நியூரிலா 3ம் பரிசு
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

### கூடிய மாணவர்களைப் பரீட்சைக்குத் தோற்றச் செய்த பாடசாலைக்கான பரிசு

யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி 1 ம் பரிசு
யா/ இந்து மகளிர் கல்லூரி 2 ம் பரிசு
யா/ மத்திய கல்லூரி 3 ம் பரிசு

## சைவ பரிபாலனசபைத் தலைவர் பதவியை அலங்கரித்தவர்கள்

நாவலர் பெருமானின் மருகரும் மாணவருமாகிய வித்துவசிரோண்மணி ந. ச. பொன்னம்பலபிள்ளை, திருவனந்தபுரம் உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. தா. செல்லப்பாபிள்ளை, சேர். பொன். இராமநாதன், திரு. பொன். குமாரசுவாமி, சேர். அ. கனகசபை, திரு. சி. கந்தையா, சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி, சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம், திரு. ஆ. அம்பலவாணன், அதிகாரம் அ. நாகநாதர், திரு. அ. தில்லையம்பலம், திரு. சி. சிவகுருநாதன், திரு. த. முத்துசாமிப்பிள்ளை, திரு. வே. நாகலிங்கம், திரு. த. சோமசுந்தரம், திரு. சி. செல்வராசா, திரு. சி. இராசேந்திரன், திரு. இ. மகேந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சைவ பரிபாலன சபை

111 வருடச் சமயப் பணி

# ஒரு வரலாற்றுக் குறிப்பு

1888 சர்வதாரி சித்திரைத் திங்கள் 19 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை ''யாழ்ப்பாணம் சைவசமய பரிபாலன சபை'' வண்ணை நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் தொடக்கி வைக்கப்பட்டது.

1889 விரோதி ஆடி 7 ஆம் நாள் ''சைவபரிபாலன சபை'' எனப் பெயர் மாற்றம், நீராவியடியைச் சேர்ந்த சைவப் பெரியார் ஆறுமுகம்பிள்ளைக்கு சொந்தமாகவிருந்து, அவர் 1888 இல் அமரத்துவமடைந்தபின் பாவனையற்றிருந்த சைவப்பிரகாச அச்சியந்திரசாலை அன்னாரின் குடும்பத்தினரால் சைவபரிபாலன சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. 11-09-1889 அன்று தமிழில் ''இந்துசாதனம்'' என்றும் ஆங்கிலத்தில் 'HINDU ORGAN' என்றும் நாமம் தாங்கி ஆங்கிலமும் தமிழும் சேர்ந்த பத்திரிகை இரு வாரத்துக்கு ஒருமுறை வரும் புதன்கிழமைகளில் டெமிஅளவில் வெளியிடப்பட்டது.

1890 திரு. நாகலிங்கம் என்பவரால் நடத்தி வரப்பட்ட 'Town High School' ஐப் பொறுப்பேற்ற சைவ பரிபாலன சபை 'Hindu High School' என்ற பெயரில் அதனை நடத்தத் தொடங்கியது.

1905 சைவப் பிரகாச அச்சியந்திரசாலை தற்போதைய யாழ் இந்துக் கல்லூரியின் தென்பாகத்தில் காங்கேயன்துறை வீதியை நோக்கியவாறு அமைந்த கட்டடத்திற்கு மாற்றப்பட்டது.

1906 ஆடி மாதம் முதல் இந்து சாதனம் தமிழ் ஆங்கிலப் பிரசுரங்கள் 'றோயல்' பிரமாண அளவில் பிரசுரிக்கப்பட்டன.

1910 திரு. நாகலிங்கம் என்பவர் நடத்தி வந்த 'விக்டோரியா ஞாபகார்த்த வாசிகசாலை'யை சைவ பரிபாலனசபை பொறுப்பேற்றது.

1913 ஆடி மாதம் முதல் இந்து சாதனம் வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் வெளி வந்தது. HINDU ORGAN வாரம் இருமுறை வெளிவந்தது.

1923 ஆடி மாதம் 5 ஆம் நாள் இந்துசாதனமும் ... இருமுறை திங்கள், வியாழன் தோறும் ... யிடப்பட்டது.

1928 விபவ கார்த்திகை 12 ஆம் நாள் (23-11-1... சைவப் பிரகாச அச்சு யந்திரசாலையும் ... சாதன - HINDU ORGAN பத்திரிகைக் காரியமும் புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டது.

1931 சைவபரிபாலனசபை இலங்கை அரசினால் ... பூர்வமாக (Incorporated) அங்கீகரிக்கப்பட்ட...

1938 சிதம்பரம் அம்பலவாணசுவாமி புண்ணிய... மட தரும பரிபாலனத்தைச் சபை பொறுப்பேற்... இத்தருமத்துள் மறவன்புலவு தோப்பு சிதம்... சித்தி விநாயகர் ஆலய பரிபாலனமும் அடங்...

1946 கல்லூரி வீதியில் பத்துப் பரப்புக் காணி நா... ஆச்சிரம மண்டபம் அமைப்பதற்காக வாங்... பட்டது

1947 நாவலர் ஆச்சிரம மண்டபம் நிறுவப்பட்டது.

1952 சங்கானைச் சிவன் கோவில் நிர்வாகத்தைத் ... சின்னத்தம்பி தாமோதரம்பிள்ளை அவர்க... மிருந்து பொறுப்பேற்றது.

1959 கோயிலாக்கண்டி சிவன்கோவில் நிர்வாகத்... பரமசாமி ஐயர் நாகம்மா அவர்களிடமிரு... பொறுப்பேற்றமை.

1960 நீராவியடி குருக்கள் மடம் அமைக்கக் காணி... பொறுப்பேற்றமை.

1963 சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் பரீட்... களையும் சித்தாந்த பிரவேச பண்டிதர், ... பண்டிதர், பண்டிதர் பரீட்சைகளையும் நடாத்... தொடங்கியது.

1964 வேதாரணியம் கார்த்திகை மட தருமபரிபால... தைப் பொறுப்பேற்றது.

1972 அகில இலங்கைச் சமயபாடப் பரீட்சைக... நடாத்தத் தொடங்கியது.

சைவபரிபாலனசபையின் வேலணைக் கிளை ... பிக்கப்பட்டது.

1974 நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் 'சைவ நூல... ஆரம்பிக்கப்பட்டது.

1975 ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் தர்ம ஸ்தாப... கட்டடத்தின் ஒரு பகுதியைப் பொறுப்பேற்... கொண்டது.

## சித்திரா பூரணை முதல் வைகாசிப் பூரணை வரை
## சைவசமய விரத காலங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| சித்திரை | 17 | 30-04-99 | வெள்ளி | சித்திராபூரணை, அர்த்தநாரீஸ்வரர் விரதம் |
| சித்திரை | 21 | 04-05-99 | செவ்வாய் | சங்கடஹரசதுர்த்தி |
| சித்திரை | 25 | 08-05-99 | சனி | நடேசரபிஷேகம், அக்கினிநாள் ஆரம்பம் |
| சித்திரை | 30 | 13-05-99 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| வைகாசி | 01 | 15-05-99 | சனி | வைகாசி மாதப்பிறப்பு |
| வைகாசி | 04 | 18-05-99 | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| வைகாசி | 06 | 20-05-99 | வியாழன் | ஷஷ்டி விரதம் |
| வைகாசி | 13 | 27-05-99 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| வைகாசி | 14 | 28-05-99 | வெள்ளி | அக்கினிநாள் முடிவு |
| வைகாசி | 15 | 29-05-99 | சனி | பூரணை, வைகாசி விசாகம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Puraanas - Meaningful Legends

The Puraanas are a blend of highly imaginative stories and subjective truths. They are like abstract paintings, which have a subtle breakaway stance from the common vision, and deflect human thought from its ordinary grooves, thus enabling it to reach for the extraordinary. They were evolved by the seers to inculcate life-refining values in the common man, while helping the intellect to transcend the limitations of the usual conditioned thought.

The Rishis gave form to the highly philosophical treatises, the Upanishads with a minimum touch or no touch of story element Thus, the Upanishads help those who have an intellectual orientation capable of grasping subjective truths, to break the conditioned shell of the intellect for exploring into the conditioned Reality. And for the majority, who cannot initially comprehend discussions of an abstract nature, the Rishis composed the Puraanas, which bring the Divine closer to the level of ordinary human concepts, thus lending a helping hand to the mind in its ascension to transcendental heights.

The Upanishads open the path of knowledge: the Puraanas lead up the path of devotion. While the higher knowledge acquired imparts a texture of humility to the seeker it instills in him a devotional reverence for the higher dimensions of the Self, which he is trying to embrace through the path of knowledge On the other hand, those who follow the path of devotion adoring the Supreme within, come closer to the blissful Reality enjoying the sweetness of an emotional involvement And as they take every step forward to reach the loving embrace of Reality, their awareness and knowledge of their object of adoration naturally increase

Thus the seeker on the Path of knowledge will be supplemented with a devotional fervour, while one in the path of devotion naturally acquires a greater perception and knowledge, if the devotion is not hamstrung by fanatical attitudes. Both the paths lead to the same goal - liberation from the biological conditioning and expansion to the freedom of Reality.

A reader of the Purarnas can observe that often a very earthy story element on reaching its climax blossoms itself in fine poetic language, into a few stanzas of sublime and inspiring philosophical ideas on the Absolute Truth, naturally lifting the mind of the reader from the ordinary to the transcendental. While the Upanishads make their pilgrimage in the realm of lofty ideas, the Puraanas generally bring down the Divine to the world of ordinary human beings in order to help the common man to refine and sublimate his emotions and passions and elevate himself to the divine dimensions within.

A deeper study of the legends in the Puraanas would reveal that they throb with superior knowledge sugar-coated in the story element. Just as a chemical equation may appear as mere meaningless scratchces to some people, these stories may be of no consequence to many. But a serious student will find them unfolding astounding vistas of meaning. They will see the sublime facets of Cosmic and human situations in these stories, which fundamentally dwell on the evolutionary struggle within man - the war between the negative and the positive aspects of the mind in its relentless urge to expand to the freedom of Supreme Existence.


**சைவ பரிபாலன சபை வெளியீடுகள் – 1999**

சைவ பரிபாலன சபை பின்வரும் நூல்களை இவ்வாண்டு மறுபதிப்புச் செய்கிறது.

**சைவ சமய சாரம்** — *சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம்*

**சிவாலய தரிசன விதி** — *ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்*

**நீதி வாக்கியங்கள்** — *ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்*

பிரதிகளுக்கு முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்


விபரங்களுக்கு:

**சைவப்புலவர் வ. கந்தசாமி**
பரீட்சைச் செயலாளர்
சைவபரிபாலன சபை,
125, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Sanskrit and Tamil symbols of OM**



Sanskrit and Tamil are two ancient languages of India with divergent origins. Yet, both eminently project the same heritage evolved in the region. Their alphabets are very different, yet the letters which represent OM have a remarkable semblance. If the Sanskrit OM resembles the head of an elephant raised with a raised trunk, the Tamil OM has almost the same shape with a downward trunk.

# Pranavam and Sri Ganesha

*Brahmam*, the causeless Cause, with infinite Potentials expresses the *Shakthi* (the power or will supreme of the Absolute) as a first vibrant cause in a *'Leela'* (sport) of creation. This subtlest vibratory state is represented by the Tamil or Sanskrit symbol of OM. This is known as the sign of *Pranavam* or *Sabda Brahmam* The word *Sabda* signifies the vibratory state. *Sabda Brahmam* means *Brahmam* in Its aspect as the first causal vibration It is the first expression of the infinite possibilities of *Brahmam* in a seed form. And from this seed arises all the forms of conscious and non-conscious energies by permutation and combination which give expression to the manifested universe of infinite diversity. Because of its seed character *Pranavam* is also known as the *Beejaaksharam*, the seed syllable. *Beeja* means seed

In the chanting of *Manthras* - the spiritually potent invocations - of all the religions originated in India, this seed syllable is used as a prefix enhance the power of each *Manthra* *Sri Gan* receives the same supreme importance like OM, occu ying the pride of place in the beginning of all au picious actions There is a revealing legend in t *Skanda Puraana* about the relation between t *Pranavam* sign and the form of *Sri Ganesha*.

Once Goddess *Parvathi*, consort of Lord *Shiv* was enjoying the marvellous works of art in an a gallery in *Kailasa*, the abode of the divine coupl When the Goddess reached in front of a huge pai ing of OM, the *Pranavam* sign, which has the sem lance of an elephants head with a raised trunk, s stood there for quite some time enjoying its artist excellence Thereupon the divine form of *Sri Ganesh* tookbirth from that great symbol of *Piranavam* *Sabda Brahmam* This legend indicates that *Sri Ganeshas'* figure is a dynamic representation of t Power of *Brahmam*.

The One Reality, *Brahmam*, in its creati *'Leela'* (sport assumes a polarisation of Two-*Paran Aathma* and *Paraa-Shakthi*, the soul Supreme a the Power Supreme These two aspects of Brahma are figuratively symbolised as Lord *Shiva* an Goddess *Paurvathi* (The Power Supreme has thr aspects: Power of Knowledge (Gnaana Shakthi Power of Will (Ichhaa Shakthi) and Power of Acti (Krivaa Shakthi) Lord *Ganesha* as the son of t divine couple, figuratively represents OM which the seed and directive force behind every form energy in the Universe. He is *Ganapathi*, the Lor of the *Ganas*, the powers responsible for the exp ression and dissolution of the material universe Therefore He is invoked first for the successfu fulfilment of every venture, mundane or spiritual

உ

# சேக்கிழார் குருபூசை

## 02-05-99 வியாழக்கிழமை

''பெரியது எது?'' எனக் கேட்ட எரிதவழ்வேலனுக்கு ஔவை கூறிய பதில் ''தொண்டர் தம்பெருமை சொல்லவும் பெரிதே'' அத்தகு சிறப்புடைய ''அளவிலாத பெருமையராகிய அளவிலா அடியார்'' களின் திருச்சரிதங்களைத் ''தெய்வம் மணக்கும்'' நாலாயிரத்து இருநூற்று எண்பத்தாறு திருப்பாட்டுக்களில் ''பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடி'' சைவ உலகுக்கு அளித்தவர் சேக்கிழார் பெருமான்.

சேக்கிழார் குடியில் அருண்மொழித்தேவர் என்ற பிள்ளைத் திருப்பெயரோடு அவதரித்து, அநபாயசோழ மகாராசாவின் பிரதம அமைச்சராக உயர்ந்து ''உத்த சோழப் பல்லவன்'' என்ற உயர் பட்டம் பெற்று வாழ் சேக்கிழார், ''தெரிவரும் பெருமைத் திருத்தொண்ட தம் பெருவரும் சீர் புகல'' வேண்டுமென்ற ''அளவ ஆசை துரப்ப'' திருத்தொண்டர் புராணத்தை இன்தமி செய்யுளாய்த் தந்து ''தொண்டர் சீர் பரவுவார்'' என சிறப்புப் பெயர்க்குரியவராகி ஞானமுடி சூட்டப்பட்டவ அவர் திருத்தொண்டர் புராணத்தில் ''செப்பலுற் பொருளின் திறத்தினால்'' அப்புராணம் ''பெரிய புர ணம்'' எனப் பெயர் பெறலாயிற்று.

இத்தகு சிறப்பு மிகு நூலை எமக்குத் தந்த சேக்கிழா பெருமானின் குருபூசை தினம் வைகாசிப் பூசமாகும். அ இவ்வாண்டு வைகாசித் திங்கள் ஆறாம் நாள் (20-05-9 வியாழக்கிழமை அமைகிறது. இத்தினத்தில் சேக்கிழா பாதம் பணிந்து திருத்தொண்டர் சீர் பரவி நற்சதியடை வோமாக.

**சேக்கிழார் குருபூசை**

நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் 20-05-99 வியாழக்கிழமை முற்பகல் 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சிறப்பாகக் கொண்டாடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பர் காட்டும் வாழ்க்கை நெறி

## சித்திரைச் சதயத்தில் குருபூசை

சித்தமலமற்று சிவமயமாகும் சிவாநந்தப் பேற்றை டையச் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் ன்கு சாதனங்கள் உண்டு. இவற்றுள் சரியையாவது த்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு புலர்வதன் ள் அலகிட்டு மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேந் புகழ்ந்து பாடித் தலையாரக் கும்பிட்டு கூத்து டிச் சங்கரா சய போற்றி'' என்று அன்போடு றைவனை வழிபட்டுத் தொண்டு செய்தலாகும். அன் டு தொண்டு செய்து வழிபட்டு வர அன்பு வளர்ந்து னோடு ஒரு உறவுநிலை ஏற்படுகிறது. இறைவனை ண்டவனாகவும் தம்மை அடிமையாகவும் கருதி வழிபடும் தி மார்க்கம் முகிழ்கிறது. இது தாச மார்க்கம் எனவும் ழைக்கப்படும். இந்த மார்க்கத்தில் வாழ்ந்து காட்டிச் ாநந்தமுற்றவர் திருநாவுக்கரசு சுவாமிகள்.

பத்தியை வளர்க்கும் சாதனங்களுலெல்லாம் மிகச் ந்தது இறைவன் நாமத்தைக் கூறுதல். இதுவே மிக ய சாதனம். அதிலும் இறைவனை மனதுள் இருத்திக் ண்டு - நினைத்துக்கொண்டு - அவன் நாமத்தை ஓது அதிக பலன் தரும். சிலர் துன்பம் வந்தபோது தான் றவனை நினைவர். நன்மை கிடைக்கும்போது னக்க மாட்டார்கள். இறைவனை துன்பம் வரும் தும் சரி, இன்பம் வரும் போதும் சரி நினைத்தல் வேண் . அப்பர் சுவாமிகள் ''நெஞ்சம் உமக்கே இடமாக த்தேன், நினையாது ஒருபோதும் இருந்தறியேன்'' றும் ''நலந்தீங்கினும் உன்னை மறந்தறியேன், உன் ம் என்நாவில் மறந்தறியேன்'' என்றும் ''கற்றுணைப் டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சி யவே'' என்றும், ''பேசாத நாளெல்லாம் பிறவா ளே'' என்றும் கூறியிருப்பது நோக்கற்பாலது. நாம பம் அப்பர் காட்டிய வாழ்வு நெறிகளுள் ஒன்று.

★ ★ ★ ★

பக்தியை வளர்த்தற்கு இன்னொரு சாதனம் உருவ பாடு. இறைவனின் அன்பு மயமான வடிவத்தை தயத்தில் வழிபட்டாலும் புறத்தே வழிபட்டாலும் நன்மை தரும். ''நினைப்பவர் நெஞ்சமே கோயிலா கொண்ட'' எம் பெருமானைப் பூவும் நீரும் கொண்டு பட்டு மனமுருகி அவன் புகழ் பாடுவதன் மூலம் அவ ன் பெற்றுய்யலாம். இதனை அப்பரின் ''சலம் பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை பாடல் மறந் தறியேன்'' என்ற வாக்கு எடுத்தியம்புகிறது. அப்பரின் இம் முதலாவது செந்தமிழ்ப்பதிகத்தை திருச்செவிமடுத்த இறைவன்,

''பாவுற்றலர் செந்தமிழின் சொல்வளப்
பதிகத் தொடை பாடிய பான்மையினால்
நாவுக்கரசென்றுல கேழினும் நின்
நன்நாமம் நயக்க மன்னுக''

என அருளிச் செய்தார். அவ்வாறு தமிழோடு பாடிய இசை சூலைநோயை நீக்கியது.

அப்பர் பட்டி, தொட்டியெல்லாம்சென்று அங்குள்ள கோயில்களில் உழவாரப்பணி செய்து பூவும் நீரும் கொண்டு வழிபட்டு சொல்வளப் பதிகத்தொடை பாடி பக்தி நெறி பரப்பினார். ஆலய வழிபாடும் தமிழோடிசை பாடலும் அப்பர் காட்டிய மற்றோர் வாழ்வு நெறி.

★ ★ ★ ★

ஐம்பொறிகளுக்குப் புலப்படும் பொருள்களையே விருப்போடு நினைத்தல் சாதாரண மனித இயல்பு. ஏனெனில் அவனுக்கு அவைகளால் பெறக்கூடிய இன்பம் வெளிப்படை. ஆனால் இறைவனைப் பற்றி எழும் இன்பம் சாதாரண மனிதனின் அனுபவத்தில் இல்லை. ஆதலால் ஆன்மாவுக்கு இறைவன் மேல் ஈடுபாட்டை உண்டாக்குதல் அவசியமாகிறது. இறைவனில் ஈடுபாடு ஏற்படுவது ஆன்ம இயல்பாயினும் மாயையின் செயலால் அது தடுக்கப்படுகிறது. அந்த மாயை நீங்கி ஆன்மாவுக்கு இறைவன் மீது ஈடுபாடு ஏற்பட பல படிகள் உண்டு. முதலில் அவன் பெருமையையும் குணங்களையும் அறிந்தோர் சொல்லக் கேட்கும் நிலை. பின் அவனது குணங்களை உணர்ந்து அவனது நாமத்தைச் சொல்லும் நிலை. பின் இறைவனது பெருமையையும் குணங்களையும் மனதால் அடிக்கடி நினைக்கும் நிலை. பின் தன்னைச் சூழ்ந்த யாவற்றையும் துறந்து இறைவனையே ஏத்தி நிற்கும் பித்து நிலை. இறுதியாக தன்னுணர்விழந்து தலைவனாகிய ஈசனுடைய திருவடிகளைத் தியானிப்பதொன்றே அன்றி வேறொரு காரியமுமற்ற மனம் ஒன்றிய நிலை. இதுவே பக்தி ஏற்படும் முறையும் அதன் விளைவும். இதனைத் திருநாவுக்கரசர் மிக அழகாகக் கூறுகிறார்:

(15 ஆம் பக்கம் பார்க்க)

உ

நினைவு கூர்ந்து அஞ்சலிக்கிறோம்

திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் (இந்து சாதனம் முன்னாள் பத்திராதிபர்)
திரு. சி. இராஜேந்திரன் அவர்கள் (சைவ பரிபாலனசபை முன்னாள் தலைவர்)
திரு. க. கனகராசா அவர்கள் (மில்க்வைற்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பர் காட்டும் வாழ்க்கை நெறி

## சித்திரைச் சதயத்தில் குருபூசை

(14 ம் பக்கத் தொடர்ச்சி)

''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்;
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே''

இறைவனிடம் எம்மைப் பூரணமாக ஒப்படைப்பது அப்பர் காட்டிய இன்னுமோர் வாழ்க்கை நெறி.

அப்பரடிகள் வாழ்க்கையில் பட்ட முதல் துன்பம் சூலை நோய். இது அவர் திருந்துவதற்கு உதவியது. அவர் பின்னர் பட்ட துன்பமெல்லாம் பிறர் (எம்) பொருட்டாகும். பிறர் பொருட்டுத் துன்பத்தை ஏற்றல் ஒருவிதத் தெய்வீக ஆணையாகும். அதனால் துன்புற்றவர்களுக்கு எதுவித ஊறும் விளைவதில்லை. திருநாவுக்கரசர் நீற்றறையில் இடப்பட்டதும், யானையால் இடறப்பட்டதும் கல்லுடன் கட்டிக் கடலில் இடப்பட்டதும், அவருக்கு எதுவித ஊறும் விளைவிக்கவில்லை. ஆனால் இந்த சோதனைகள் பிறர் திருந்துவதற்காக இறைவனால் தனது பக்தனுக்கு கொடுக்கப்பட்டவைகளாகும். அடியவர்களை ''ஈர அன்பினர்'' என்கிறார் சேக்கிழார். தனக்கு எத்துணைத் துன்பத்தைத் தந்த சமணர்களை நாவுக்கரசர் ஒரு கடிய சொல் கூடக் கூறி ஏசவில்லை. ''வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலா சமணர் தந்த நஞ்சு அமுதாக்குவித்தார் நனிபள்ளி அடிகளாரே'' என்று மட்டும் அப்பர் கூறியுள்ளார். தமக்கு நஞ்சு ஊட்டியவர்களை சமணர் (ஒத்துக்கொள்ள முடியாதவர்கள் என்றே அழைக்கிறார், உனக்கு துன்பம் செய்பவனிடமும் அன்பாயிரு; ஈரநெஞ்சனாயிரு என்பது அப்பர் புகட்டும் இன்னோர் வாழ்வு நெறி.

உண்மையடியார்கள் அல்லல்களைக் கண்டு அஞ்சமாட்டார்கள். தமக்கு வந்த துன்பத்தை ஏற்று அனுபவிப்பதன் மூலம் அவர்களது மனதில் ஒரு தெம்பு ஏற்படுகின்றது. இது மமதையுமல்ல, ஆணவமுமல்ல. பக்தனின் மனதில் ஏற்படும் தெம்பு, உறுதி, நம்பிக்கை ஆகியவற்றின் வெளிப்பாடாக ''அஞ்சாமை'' குடி கொள்கிறது. அதுவே அப்பர் சுவாமிகளை ''நாமார்க்கும் குடியல்லோம்'' எனவும் ''வானம் துளங்கில் ஏன்? மண்கம்பம் ஆகில் ஏன்?''எனவும்''அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை'' எனவும் முழங்க வைத்தது. இந்த அஞ்சாமையையே சேக்கிழார் ''வீரம் என்னால் விளம்பும் தகையதோ'' என அடக்கமாகக் கூறுகிறார். வீணான அச்சத்தைத் தவிர் என்பது அப்பர் காட்டும் இன்னோர் வாழ்க்கை நெறி.

சைவம் ஒரு அன்பு மதம். பிற உயிர்களிடம் அன்பு செலுத்துவதும் அவர்கள் துயரம் கண்டு கண்ணீர் சிந்துவதும் பக்தனின் இயல்பு. ஆகவே உண்மையான பக்தன்
பெரும் சமூக சேவகனாகவும் இருப்பான். வேண்டி
வேண்டாதவர் என்ற பாகுபாடற்று எல்லா உயி
மீதும் அன்பு செலுத்துவான். திருநாவுக்கரசரிடமுப்
ஞானசம்பந்தரிடையேயும் பக்தனுக்குரிய இந்தப்
பைப் பார்க்கிறோம். திருஞானசம்பந்தரும், திருந
கரசரும் திருவீழிமிழலை என்ற பதியை ஒரே சமய
சென்றடைந்து தங்கியிருந்தநேரத்தில் அவ்வூரில் பெரு
சம் வருகிறது. இறைவன் அடியார்களாகிய இவ்விரு
மழை இன்மைக்குக் காரணம் 'அவ்வூர் மக்கள் செ
பாவம்' எனக் கூறிவிட்டுச் செல்லவில்லை. பஞ்சம் 
வரை மடம் ஒன்று அமைத்து அங்கு வந்தோர் அனை
கும் உணவு படைத்தனர். அவர்கள் தத்தம் மடங்க
வேளாவேளைக்கு உணவு பரிமாறப்படுகிறதா என்பதை
உறுதி செய்து கொண்டனர். திருஞானசம்பதர் மட
காலந் தாழ்த்தி உணவு படைக்கப்படுவதை அவதா
ஆளுடைய பிள்ளையார் ''திருவமுது காலத்தால் 
இங்கு மேவுமிக்க அடியவருக் களியா வண்ணம் வி
தவாறென்கொலோ'' எனக் கேட்டு காரணத்தை 
முற்படுகிறார். காரணத்தை அறிந்தவுடன் அதை
போக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்து விடுகி
இலவசமாக உணவளித்த இவர்கள் வேளாவேளை
பரிமாறப்படுகிறதா என கவலைப்பட்டது. அவர்க
அருளுள்ளத்தை சமூக சேவையின் உயர் நிலையை 
துக் காட்டுகிறது. மக்கள் துன்பத்தைப் போக்கு
மகேஸ்வரன் பணி என்பதைத் தாரகமாகக் கொ
வாழ்ந்து காட்டிய பெருமை மிகு பக்தர்களே அப்ப
பிள்ளையாரும்.

அப்பரும், பிள்ளையாரும் இறைவன் மீது கொ
நம்பிக்கையை மூலதனமாக வைத்தே இந்த அறப்ப
யைச் செய்தனர். இந்த நம்பிக்கையால் அவர்கள் 
மடங்கள், ''ஈறிலாத பொருளுடைய'' னவாக
அங்கு சோறு நாளும் உண்ண உண்ணத் தொலைய
தாகவும் இருந்தது.

இந்த நாயன்மார்கள், மக்களுக்கு நல்லுபதேசம் செ
வது தான் தம் கடமை; அவர்கள் துன்பங்களை நீக்கு
தமது கடமையல்ல என நினைக்கவில்லை. இறை
பற்றி மக்களுக்கு எடுத்துக்கூறமுன் அவர்களுடைய ப
பிணியைப் போக்க வேண்டியது பக்தர்களின் பெருங்
மையாகும். அதனாற்றான் அப்பரும் சம்பந்தரும
பெரிய புராணத்தில் போற்றப்படும் பல நாயன்மார்க
பசிப்பிணியை நீக்க முயன்ற வரலாறுகளைக் கா
றோம்.

பக்தர்களும் அடியார்களுமான இந்நாயன்மா
மக்களது வயிற்றுப்பசியைப் போக்கினார்கள். அப்பே
அவர்கள் சிவனடியார் எனவும் பிரித்துப்பார்க்கவில்
பெரியபுராணத்தை எடுத்துக்கொண்டால் அடியார்
பசிப்பிணியைப் போக்கியதாகவே பொதுவாகக் கூறப்
கிறது. அடியார்கள் என்ற செல்லினால் யார் குறிப்பி
படுகிறார்கள்? அடியவர்கள் என்று குறிப்பிடப்படுவர்

(16 ஆம் பக்கம் பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பர் காட்டும் வாழ்க்கை நெறி

## சித்திரைச் சதயத்தில் குருபூசை

5 ஆம் பக்கத் தொடர்ச்சி)
நாரண மக்களேயாவர். ஏனெனில் எல்லா உயிர்களிலும் றைவன் குடியிருக்கிறான் என்ற கோட்பாட்டைக் ண்டுள்ள நாயன்மார்கள் சகல மக்களையும் இறை ின் அடியார்களாகவே கண்டனர். அவர்கள் வசதி டைத்தவருக்கு ஒரு விதமாகவும் வறியவருக்கு வேறு மாகத்தானும் உணவூட்டவில்லை இதைச் சேக்கிழார் டிட்டுக் காட்டுகிறார். ''நாதர் விரும்படியார்கள் ளும் நாளும் நல்விருந்தாய் உண்பதற்கு வருக என்று ல் பறை நிகழ்வித்துச் சென்ற தொண்டர் திருவமுது, , நெய், பால், தயிர் என்று இன்ன ஏதமுற தினி ண'' ஊட்டப்பட்டதாகச் சேக்கிழார் கூறுகிறார். தனை விரும்பும் அடியார்களுக்கு உணவூட்டப்பட்ட ப்க் கூறவில்லை. நாதனால் விரும்பப்படும் அடியார் க்கு உணவூட்டப்பட்டதாகவே கூறப்படுகிறது. எல்லா ளுமே இறைவனால் விரும்பப்படுபவர்கள். ஆனால் றவனை விரும்புபவர்கள் ஒரு பகுதி மக்களே. ஆகவே ல மக்களும் உணவுண்ண அழைக்கப்பட்டார்கள் என்பது றப்படுகிறது. அவர்களுக்கு குறைவில்லாது (ஏதமுறாது) விருந்து அளிக்கப்பட்டது மேலும் ''அமுது செய்யத் ண்டர் அளவிறந்து பொங்கி வருமவர்கள் எல்லோர்க் வந்தோருக்கும் மகிழ்ந்து உண்ண இன்னடிசில் ாதா'' யிருக்குமாறு சிவபெருமான் அருள் செய்த ச் சேக்கிழார் கூறுகிறார். ஆகவே நாயன்மார்களுடன் க்கும் அடியார் கூட்டத்திற்கு மட்டுமல்ல; அளவில்லாது லும் மேலும் அதிகரித்து வருபவர்கள் அனைவருக்கும் டுமல்ல; முன்பு வந்தவர்களுக்கும் (அதாவது திரும் ம் சாப்பிட வருபவர்களுக்கும்) கூட உணவு வழங்கப் கிறது. சாதாரண சாப்பாடல்ல; மகிழ்ந்து சாப்பிடக் ய இனிய சாப்பாடு (இன்னடிசில்) வழங்கப்படுகிறது. ற்றிலிருந்து வந்தவர்கள் அனைவரும் இறைவனது யார்கள் ஆகக் கருதப்பட்டு உபசரித்து உணவூட்டப் டனர் என்பது தெளிவாகிறது. பசித்தார் எவராயினும் ர்களுக்கு உணவூட்டுதல் ஒரு பக்தனுக்குரிய பண்பு. தப் பண்பை அப்பர் தமது வாழ்க்கை மூலம் உணர்த் ள்ளார்.

★ ★ ★

பசியால் வருந்துபவர்கள் துயரை மட்டும் போக்க னார் முயன்றார் என்பதல்ல. பிறரது துயரம் எது னாலும் அதனைப் போக்குவதே தமது கடமையாகக் ண்டவர் நாயனார். திருநாவுக்கரசர் திங்களூரை டந்தபோது அப்பூதியடிகளாரின் திருமனையில் அமுது ய இணங்கினார். அப்போது இறைவனின் அருட் ப்பால் உணவு அருந்துவதற்குத் திருவுள்ளத்தில் மாற்றம் ஏற்பட்டது. அப்பூதி அடிகளாரின் திருமக ிய மூத்த திருநாவுக்கரசு என்ற சிறுவனை அரவம் டிய செய்தி வெளிப்படுத்தப்படுகிறது. அப்பூதியாரின் துயர் அகற்றப் புறப்படுகிறார் அப்பர். இறந்த மைந்த னுடைய உடலை நோக்கி ''ஒன்று கொலாம் அவர் சிந்தையுயர் வரை'' எனத் தொடங்கும் பாடலை முதலாகவும்

''பத்துக்கொ லாம் அவர் பாம்பின் கண்
பாம்பின்பல்
பத்துக்கொ லாம் எயிறும் நெரிந்து உக்கன
பத்துக்கொ லாம் அவர் காயப்பட்டான் தலை
பத்துக்கொ லாம் அடி யார் செய்கை தானே''

என்ற பாடலை இறுதியாகவுமுடைய பதிகத்தைப் பாடி சிறுவனை உயிர்ப்பித்தார் என்பது வரலாறு. இப்பதி கத்தில் இறைவனது பேராற்றலை எடுத்துக்கூறி அதன் மூலம் அப்பூதி அடிகளின் துன்பத்துடன் ஒப்பிட்டு இறைவன் கருணை பாலிக்க வேண்டிய இடம் என்பதை உணர்த்தி அற்புதம் நிகழ்த்தினார் அப்பரடிகள். பிறர் துயர் கண்டதும் அதனைத் தீர்க்க முயல்வது ஒரு பக்த னுக்குரிய இலட்சணம். இப்பண்பை அப்பர் தம் வாழ்வு மூலம் எமக்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

★ ★ ★

அடியவர்கள் பற்றில்லாதவர்கள். அவர்கள் ''கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்; ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்; கூடும் அன்பினில் கும்பிடலே, அன்றி வீடும் வேண்டா விறலின்'' விளங்குபவர்கள். திரும்பூம்புகலூரில் வீற்றிருந்து உழவாரப் பணி செய்த அப்பரடிகளைச் சோதிக்க உழவாரம் நுழைத்த இடமெல் லாம் பொன்னும் மணியும் எதிர்ப்பட்டன. ஆனால் அவரோ ''புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணி யோடும் வேறுபாடிலா நிலைமை துணிந்து'' இருந்தார். இறுதிக் கட்ட சோதனையாக அரம்பையர் வந்து ஆடல் பாடலில் ஈடுபட்டு லீலைகள் புரிந்த போது அப்பரடிகள் 'அத்தனார் திருவடிக் கீழ் நினைவகலா அன்புருகும் மெய்த்தன்மை' உணர்வுடன் ''சித்த நிலை திரியாது செம்பணியின் தலை நின்றார். பற்றை விடுங்கள் என்பது அப்பர் காட்டும் வாழ்க்கை நெறிகளுள் ஒன்று.

இவ்வாறு சரியை மார்க்கத்தில் வாழும் நெறி காட் டிய திருநாவுக்கரசு சுவாமிகள், திருப்புகலூரிலே ''என்னை யினிச் சேவடிக் கீழ் இருத்திடும்'' என்று வேண்டும் ''எண்ணுகேன்'' எனத் தொடங்கும் தேவாரப் பதிகத் தைப் பாடி ''நண்ணரிய சிவானந்த ஞானவடி'' வாக் சித்திரைச் சதயத்தன்று அண்ணலார் சேவடிக்கீழ் அமர்ந்தனர். அப்பரடிகள் காட்டிய வழிநின்று நற்கதி பெறுவோம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சைவபரிபாலன சபையினரால் 430, காங்கேசன்துறை வீதியில் உள்ள பாரதி ப்பகத்தில் அச்சிடப்பட்டு 30-04-99 (பூரணை) அன்று வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org